# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25 — தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, தை 16உ (30-1-72) ஞாயிறு 1391 ஜுஹஜ் 13 புத்தகம் 25 இதழ் 10


## யாழ் நகரில் விடுதலைவீரர்களின் பாசறைகூடுகிறது!

# இன விடுதலைப் போருக்கு அறைகூவல்!

## புதிய அரசியலமைப்பு நிராகரிப்பு!

யாழ்ப்பாணம் சன-28

புதிய அரசியலமைப்புத் திட்டத்தினால் தமிழினத்துக்கு ஏற்படவிருக்கும் பேராபத்தை எடுத்து விளக்கி அதிலிருந்து மீட்சி பெறும் வழிவகைகளை ஆராய்ந்து திட்டவட்டமான, அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்காக இந் நாட்டுத் தமிழினத்தின் விடுதலைப் பாசறையான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாடு நாளையும் நாளை மறு நாளும் யாழ் நகரில் நடைபெறுகிறது.

இச் சிறப்பு மாநாடு புதிய அரசியல் திட்டத்தை முற்று முழுதாக நிராகரிக்குமென்றும் விடுதலைப்போருக்கு தயாராகுமாறு தமிழ் பேசும் மக்களுக்கு அறைகூவல் விடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டின் முடிவுகளை அறிந்திட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், துடிக்கும் விடுதலை உணர்வோடு, எழுச்சியுள்ளத்தோடு, யாழ் நகரை நோக்கி முற்றுகையிட்டிருக்கிறார்கள்.

திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, கொழும்பு, மலைநாடு போன்ற தமிழ் பேசும் பிரதேசங்கள் எங்குமிருந்து இச் சிறப்பு மாநாட்டில் கலந்து கொள்ள பிரதிநிதிகளும் மற்றும் ஏராளமான தமிழ் மக்களும் வருகை தந்துள்ளனர்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இச் சிறப்பு மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக

(11-ம் பக்கம் பார்க்க)

### சோஷலிசமாம் சோஷலிசம்...!

ஊவாப்பகுதியில் நான்கு பாடசாலைகளில் 6ம் வகுப்பு (தமிழ்) திடீரென அகற்றப்பட்டிருக்கிறது. பசறை மாவித்தியாலயம், பதுளை ஊவாக்கல்லூரி, பண்டாரவளை சென் ஜோசப் கல்லூரி, பண்டாரவளை விட்டில் பின்வரி கொன்வெண்ட், ஆகிய பாடசாலைகளே தமிழ் வகுப்பு நிறுத்தப்பட்ட பாடசாலைகளாகும். இதனால் ஆயிரக்கணக்கான மலையக தமிழ் மாணவர்களின் கல்வி பறிக்கப்பட்டிருக்கிறது. தமிழனின் கல்வியைப் பறிப்பதற்கும் பெயர் சோசலிசமாம் இந்நாட்டில்!

### உணர்ச்சியுள்ள தமிழர்களே! களையெடுப்பில் இறங்குவீர்!

"தமிழரிடையேயுள்ள அறிவுக்குருடர்களும் ஆண்மைக் குள்ளர்களும் விரைவிலேயே ஒழிக்கப்பட வேண்டும். ஒவ்வொருதுறையிலும் உள்ள உணர்ச்சி மிக்க தமிழர்கள் தம்மிடையேயுள்ள சிறிய வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல் ஒன்றுபட்டு நிற்பதன் மூலம், இந் தக்களையெடுப்பை நடத்தி விடலாம் என்று நம்புகிறேன்.

"வங்க விடுதலைபோன்ற பெரிய நிகழ்ச்சியை நாம் நல்லவிதமாகப் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். எப்படியோ மக்களின் உணர்ச்சி அந்தக் கேடர்களுக்கு எதிராகச் சரியாகத் திருப்பப்பட்டால் அவர்கள் அதன் பிறகு தலையெடுக்க முடியாதென்பது என் எண்ணம். தீவிர எழுச்சிகொள்க, என் ஈழம்!

ஈழத் தமிழர் போராட்டம் என் நெஞ்சின் மீதே நடப்பதுபோல உணர்கிறேன். எப்போது என் தமிழனின் கை ஓங்கும் என்று ஆவல் துடிப்போடு எதிர்பார்த்திருக்கிறேன்.

—சாலை இளந்திரையன்.

தில்லிப் பல்கலைக்கழகம்,
தில்லி.

[யாழ்நகரில் நடைபெறும் தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு குறித்து மேற்கண்ட சிறப்பு செய்தியை தில்லிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சாலை இளந்திரையன் எம். ஏ. எம். லிட், பி. எச்டி, டிப். யு. என். ஐ. யு. அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளார்.]

### வாழ்க இந்தியக் குடியரசு!

இந்திய சமஷ்டிக் குடியரசு இத்திங்கள் 26ம் நாள் தனது குடியரசுதினத்தை குதூகலமாகக் கொண்டாடியது.

வங்க இனத்தை படுகொலையிலிருந்து மீட்டு வங்காளியருக்கு நீதியும், விடுதலையும் பெற்றுத்தர உதவியளித்த துணிச்சலான செயல் மூலம் இந்தியத்திருநாடு உலக விடுதலை விரும்பிகளின் இதயங்களில் எல்லாம் அழியா இடத்தைப் பெற்றுவிட்டது.

அயல் வீட்டில் நடக்கின்ற இன ஒழிப்புக் கொடூரத்தை அடக்கி வலுவிழந்த மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுத்த நேருவின் புதல்வியை — இந்திராகாந்தியை போற்றாத வாயே இல்லை!

வாழ்க இந்திய நாடு! வளர்க இந்திராவின் கீர்த்தி!

## அரசியல் சட்டத்தில் தமிழுரிமை பாதுகாக்கப்படவில்லை!

### கம்யூனிஸ்ட் தொழிற் சங்கமும் கூறுகிறது!

புதிய அரசியல் சட்டத்தில் தமிழினத்தின் உரிமைகள் இடம் பெறவில்லையென்று நாம் கூறும்போது எம்மை வகுப்புவாதிகள் என்றும், இனவெறியர் என்றும் கம்யூனிஸ்டுகள் தூற்றுகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் பூரண ஒப்புதலுடன் கொண்டு வரப்பட்டுள்ள புதிய அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படவில்லையென்று கம்யூனிஸ்ட் தொழிற் சங்கமான ஐக்கிய தோட்டத்தொழிலாளர் சங்கமும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஐ. தோ. தொ. சங்க தலைவர் திரு. எஸ். நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"புதிய அரசியல் சட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் தமிழ் மக்கள் தமிழைப் பயன்படுத்தும் உரிமை கூட கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழைப் பயன்படுத்துவது பற்றி தீர்மானிக்கும் உரிமை தேசிய சபையிடம் விடப்பட்டுள்ளது மிகப் பெரிய அநீதியாகும். எனவே உத்தியோக மொழி சம்பந்தப்பட்ட 11வது பிரிவு, ஐ. நா. சாசனப்படி தமிழ் மக்கள் அவர்

(11-ம் பக்கம் பார்க்க)

## தமிழா! இந்தியாவைப் பார்! 3 புதிய அரசுகள் தோன்றின!

இந்திய சமஷ்டியின் அங்கமாக மூன்று புதிய மாநில அரசுகள் முகிழ்த்துள்ளன. வட கிழக்கு இந்தியாவில் இதுவரையில் அஸ்ஸாம் மாநிலத்துடன் ஒரு இணைப்பு மாநிலமாக இருந்து வந்த 'மேகாலயா' ஒரு தனி மாநில அரசாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது: மணிப்புரி, திரிபுரா ஆகிய மாநிலங்களும் தனித்தனி அரசுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநில அரசும் தனித்தனி சட்ட சபையின் கீழ் இயங்கும்.

மேற்கண்ட மூன்று புதிய மாநில அரசுகளுடன் 'அருணசல பிரதேசம்' எனும், சுயாட்சி மாகாணமும் தோன்றியுள்ளது. இது முன்னர் 'நேபா' என்று அழைக்கப்பட்ட பகுதியாகும்.

இந்திய சமஷ்டியில் எல்லாமாக மொத்தம் 21 மாநில அரசுகள் இப்போது செயல் படுகின்றன.

நேற்றுத்தோன்றிய இனங்களும், மொழிகளும் கூட இன்று சுயாட்சி பெறுகின்றன. ஈழத் தமிழ் மகனே! உன் நிலை என்ன?

## திரைப்படக் கூட்டுத்தாபனத்திலும் தமிழருக்குக் கழுத்தறுப்பு!

திரைப்படக் கூட்டுத்தாபனத்திலும் தமிழருக்கு இடமில்லை!

உள்ளூரில் திரைப்படத் துறை வளர்ச்சிக்[illegible] திரைப்படக் கூட்டுத்தாபனம் நிறுவப்படுவதாக அரசதரப்பில் கூறப்படுவது தெரிந்ததே. ஆனால் திரைப்படக் கூட்டுத்தாபனம் நிறுவப்படுவதன் அடிப்படை [illegible] திரைப்படத்தை விடுவதல்லவென்றும் தமிழ் நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகும் தமிழ்ப் படங்களை தடைசெய்து சிங்களத் திரைப்படத்துறையை வளர்த்து சிங்களத் திரைப்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# எண்ணம்

## சிறப்பு மாநாடு!

இந்நாட்டுத் தமிழினத்தின் வரலாற்றில் என்றுமில்லாத அளவு நெருக்கடி தோன்றியுள்ள காலகட்டத்தில்-இந்தக்கிழமை யாழ்நகரில் தமிழினத்தின் விடுதலைப் பாசறையாம் தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாடு கூடுகிறது:

புதிய அரசியல் திட்டத்தில் தமிழினத்தின் சனநாயக பூர்வமான அபிலாஷைகள் கோரிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டதையடுத்து— தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டில் சுயமரியாதையுள்ள ஒரு தனித் தேசிய இனமாக தொடர்ந்து வாழ்வதா அல்லது காலப்போக்கில் அழிந்தொழிந்து போவதா என்ற கேள்விக்கு விடை காண வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு யாழ்நகரில் நடைபெறுகிறது:

ஓர் இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் மற்றோர் இனத்தினருக்கு அறவே கிடையாது: இதை ஐ: நா: சபையும் திட்டவட்டமாக ஒப்புக்கொண்டுள்ளது: வரவிருக்கும் புதிய அரசியலமைப்பில், தமிழ் இனத்துக்கு என்னென்ன உரிமைகள், பாதுகாப்புக்கள் வேண்டுமென்று தமிழ்மக்களின் பெரும்பாலான தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி மன்றப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தார்களோ அவை அனைத்தையும் நிராகரித்துவிட்டு, தமிழ் மக்கள் இப்படித்தான் வாழவேண்டுமென்று தானகவே முடிவுசெய்து அம்முடிவை தமிழ் மக்களிடமும் திணிக்க முயற்சிக்கிறது சிங்கள அரசியல் நிர்ணயசபை:

இச்செயல், நீதிநியாயத்துக்கும், சனநாயக மரபுகளுக்கும் அரசியல் தர்மத்துக்கும் கிஞ்சிற்றும் உடன்பாடானதாக இருக்கமுடியாது!

இலங்கை ஒரே நாடு என்ற கண்ணேட்டத்தில் சிந்திப்பவர்களுக்கு தமிழினம் எண்ணிக்கையில் சிறுபான்மை இனமாகத் தெரிந்தாலும்—தனக்கென தனிமொழியும்—வரலாறும், தனிக் கலாசாரமும் கலையும் இலக்கியமும் தொடர்பான நிலப்பகுதியும், கொண்ட தமிழினம் ஒரு தனி இனம் என்பதை யாரும் மறுக்கமுடியாது!

இத்தகைய பெருமைவாய்ந்த தமிழ் இனம் ஒருபோதும் அடிமைத்தனத்தை ஏற்காது— சரணகதியடையாது: தன்னைத்தானே ஆளும் உரிமையை நிச்சயம் நிலைநாட்டப் போராடியே தீரும்—என்பதை அனைத்திலங்கையும் அகில உலகமும் அறியும்படி யாழ் நகரில் கூடும் தமிழரசு மாநாடு திட்டவட்டமாக அறிவித்துவிடவேண்டும்.

புதிய அரசியல் சட்டத்தில் தமிழுக்கும், தமிழர்களுக்கும் கௌரவமான இடம் அளிக்கப்படவில்லையென்பதை இந்நாட்டில் வாழும் தமிழர்கள் அனைவருமே ஒப்புக் கொள்கிருர்கள்.

அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் தமிழ் மக்களுக்கு முழுக்க முழுக்க பாதகமானது என்று கருதியதால்தான் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அவற்றுக்கு நல்ல பல திருத்தங்களை — தமிழ் மக்களின் உரிமைகளை பேணக்கூடிய திருத்தங்களை கொடுத்திருந்தார் வட்டுக்கோட்டை பா: உ. ஆ. தியாகராசா. ஆயினும் பின்னர் ஆளுங் கட்சியுடன் சேரவேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டதால் அத்திருத்தங்கள் அனைத்தையுமே வாபஸ் பெற்றார்;

ஆளுங்கட்சியின் மற்றோர் நியமன உறுப்பினரான ஐனுப் அலிஸ்கூட,அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமானது என்று கருதியே அரசியல் நிர்ணய சபையில் சில திருத்தங்களை கொண்டுவந்தார்: எனினும் பதவி போய்விடுமே என்ற அச்சத்தினால் புதிய அரசியலமைப்புக்குஇப்போது வக்காலத்து வாங்கிவருகிருர்.

ஆளுங்கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட கிளைத் தலைவர் என்று பெருமையடித்துக்கொள்ளும் அல்பிறட் துரையப்பாவை மேயராகக்கொண்ட யாழ். மாநகரசபைகூட புதிய அரசியல் சட்டம் தமிழ் மக்களின் மொழியுரிமையை அங்கீகரிக்கவில்லையென்றும் ஐ. நா. சாசனப்படி மொழி, இன, உரிமைகள் தமிழினத்துக்கு வழங்கப்படவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நமது இயக்கத்தை விட்டுப்பிரிந்த யாழ் பிரதிநிதி சி. எக்ஸ். மாட்டினும் புதிய அரசியலமைப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகத் தெரியவில்லை —

ஆளுங்கட்சியில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற் சங்கமான ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் அரசியல் சட்டத்தில் தமிழ் இன உரிமைகள் பாதுகாக்கப்படவில்லையென்று காரசாரமாக கண்டித்திருக்கிறது:

இ. தொ. காங்கிரஸ் தலைவர் திரு: தொண்டமானும் புதிய அரசியலமைப்பு திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை;

இப்படியாக தமிழ் மக்களிடையேயுள்ள பல்வேறு சக்திகளும் புதிய அரசியல் சட்டத்தை வெறுப்புடன் நோக்குகின்றனவே தவிர மகிழ்ச்சியுடன் வரவேற்கவில்லை. இந்த உண்மையை அரசியல் திட்டத்தை தயாரித்தவர்கள் உணரவேண்டும்;

சிலர் ஆளுங்கட்சிக்கு நல்ல பிள்ளைகளாக இருப்பதற்காக முதலில் மெல்ல முனகிவிட்டு அடங்கி விட்டார்கள்; இன்னும் சிலர் தமிழ் மக்கள் மத்தியிலே தாமும் இயங்கவேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்துக்கு எதிராக பத்திரிகை அறிக்கை விட்டு பம்மாத்துக்காட்டி விட்டு அத்துடன் நிறுத்திக்கொண்டுவிட்டார்கள்.

தமிழரசுக் கட்சியொன்றுக்கு மட்டும்தான் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக துணிச்சலாக நடவடிக்கையெடுக்கும் ஆற்றல் உண்டு என்பதை நாடு அறியும்.

எனவே யாழ்நகரில் புதிய அரசியல் திட்டம்பற்றி தமிழரசு சிறப்பு மாநாடு எடுக்கவிருக்கும் முடிவுகள் அனைத்திலங்கை தமிழ் மக்களின் ஆதரவை — வெளிக்கு சிலர் எதிர்ப்பதுபோல் நடித்தாலும் — பெறும் என்பதில் துளியும் ஐயமில்லை—

மாநாட்டு முடிவை ஏற்று நடவடிக்கையிலிறங்க தமிழினம் தயாராக இருக்குமாக.

---

## (5) வான வெளியில் வட்டமிட்ட சிந்தனைகள்

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்



'பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்' என்றுஒரிடத்தில்பாடியிருக்கிருர் நமது கவிஞர் கண்ணதாசன். விமானத்தில் பறக்கும்போது இந்தப் பாடலே என் நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

உண்மைதான் —பறவையைக் கண்டு. அதைப்போல் தானும் பறக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான் மனிதன். பறவை வானவீதியில் வட்டமிட்டுப் பறக்கும்போது நானும் ஏன் அப்படிப் பறக்க முடியாதென்ற கேள்வி மனிதனின் அடி மனதில் எழுந்தது. ஆராய்ச்சி தொடர்ந்து—இதனுல் விமானம் பிறந்தது! விமானத்தைக் கண்டு பிடித்தவன் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவன் தான், ஐயமில்லை.

ஆனுல் நம்முடைய தமிழ் பண்டிதர்களைக் கேட்டுப் பாருங்கள் — "விமானமா? இது என்ன பிரமாதம்? தமிழன் காணுத விமானமா? எல்லாம் தமிழனிடம் இருந்தது தான்! அந்தக் காலத்தில் இலங்காபுரிக்கு இராவணன் சீதையைத் தூக்கி வந்தது விமானத்தில்தானே. அதுவும் புட்பக விமானம் ஐயா புட்பக விமானம்......" இப்படி ஒரேயடியாக ஒரு போடு போட்டு விடுவார்கள்!

ஆமாம், தமிழனுக்குத் தன்னுடைய பழம் பெருமை பேசுவதிலே அலாதிப் "பிரியம் உண்டு. உலகிலே வேறு எந்த இனமும் தமிழனைப் போலப் பழம் பெருமை பேசிக் கொண்டு காலத்தை விணடிக்கும் என்று நான் கருதவில்லை.

பழமை பற்றிப்பேசுவது கூடாதா என்ருல் கூடாதென்று சொல்லமாட்டேன். பழம் பெருமை பேசுவதில் தவறில்லை—எப்போது? பழம் பெருமையை எண்ணிப் பார்த்து—அதே நேரத்தில் அதனுடன் இன்றைய நிலையையும் ஒப்பிட்டு, எதிர் காலத்தில் வளமான வாழ்வுக்கு திட்டம் தீட்டிடும் போது! அஃதன்றி வரட்டுக் கௌரவம் பேசிக்கொண்டு, வெறும் திண்ணைப் பிரசங்கிகளாக தமிழர்கள் இருப்பதால்தான் தமிழினம் தாழ்வு நிலையடைந்தது என்று நான் கருதுகிறேன்.

அழகான மாட மாளிகை, அதற்கு எழிலூட்டும் கண்ணைப் பறிக்கும் வண்ண விளக்குகள், முன்னுலே பூந்தோட்டம், முல்லையும் மல்லியும் ரோசாவும், செவ்வந்தியும் பூத்துக்குலுங்குகின்றன ஆங்கு: அந்த மாளிகைக்கு அருகாலே செல்லும்போது, "இந்த மாளிகை யாருடையது தெரியுமா? என் பாட்டனுடையது; என் பாட்டன் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த வீடு இது! இந்த முற்றத்திலே நான் ஓடியாடி விளையாடி யிருக்கி[illegible] உலகம் அவனைப் பார்த்து என்ன நினைக்கும்? 'பைத்தியக்காரன்' என்றே பரிகசிக்கும்! ஏன்? இவன் பாட்டன் வீடு என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் வீடு இவனுக்கு சொந்தமாக இப்போது இல்லை—அது, யார் யாரிடமோ கைமாறி சென்று விட்டது: அப்படிச் சென்ற பிறகும் என் வீடு என்று பேசிக்கொண்டிருந்தால் உலகம் இவனை எப்படி மதிக்கும்?

ஆனுல் அதையே சற்று மாற்றி, அதோ தெரிகிறதே அழகான மாளிகை, அது என்னுடைய பாட்டன் இருந்த வீடு — அது எப்படியோ எமது கையை விட்டுப் போய்விட்டது! நான் எப்பாடுபட்டாவது அந்த வீட்டை என் பெயருக்கு மீட்டெடுப்பேன் என்று உறுதியெடுத்து அந்த முயற்சியில் இறங்கினுன் என்ருல் உலகம் நிச்சயமாக அவனது துணிவையும் ஆற்றலையும் மெச்சும்!

எனவே பழம் பெருமை பேசும் தமிழர்கள், பழம் பெருமை பேசிவிடுவதுடன் மட்டும் நிற்காமல், அத்தகையபெருமையுடன்வசழ்ந்த நமது இனம் இன்று வீழ்ந்து போனது ஏன் என்ற கேள்வியையெழுப்பி - இழந்த பழம் பெருமையை மீட்கும் வழியைக் கண்டு, அந்த வழியில் செல்ல தயாராகவேண்டும்:

## கோவை-மகேசன்

— இப்படி விமான வேகத்தில் பறந்துகொண்டிருந்த என் சிந்தனையை 'கூல் டிரிங்' தந்து குளிர்முகத்து பெண்ணொருத்தி — விமானப் பணிப்பெண் — சற்றுக் கலைத்தாள்.

'கூல்டிரிங்' பருகிய பின்னர் மீண்டும் சிந்தனைக் குதிரையை தட்டி விட்டேன். 'பறவையைக் கண்டான் — விமானம் படைத்தான்" பாடல் வரியே நினைவுக்கு வருகிறது:

பறவையைக் கண்டு விமானம் படைத்த மனிதன் பறவையிடமிருந்து வேறு எத்தனையோ நல்ல பண்புகளையெல்லாம் பழகியிருக்கலாம். ஆனுல் பறவையினத்திடமுள்ள நல்ல பண்புகள் பலவற்றை மனிதன் பின்பற்றத் தவறிவிட்டான்!

பறவைகளோ கூடி உண்ணுகின்றன — மனிதனிடம் இந்தப்பண்பு இல்லை ஒருவன் பசியால் வாட மற்ருெருவன் உண்டு கொழுக்கிருன்.

புருவும், அன்றிலும் காதலுக்கு இலக்கணம் வகுத்து வாழுகின்றன. இக்கால மனிதனே புனிதமான காதலை ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாக கருதுகிருன் —

பறவைகள் கட்டுப்பாடு எதுவுமின்றி வானவெளியில் வெகுதூரம்வரை பறந்து செல்கின்றன. நாடுவிட்டு நாடு செல்கின்றன. சுதந்திரத்தை பூரணமாக அனுபவிக்கின்றன: அவற்றுக்கு பாஸ்போர்ட் விஸா என்ற பிரச்சினைகள் இல்லை. கள்ளத்தோணியென்று அவற்றை யாரும் பழிப்பதில்லை:

பறவைகளின் சுயேச்சையான இன்ப வாழ்வைக் கண்டு நான் பொருமைப் பட்டிருக்கிறேன். நானும் ஒரு பறவையாக பிறந்திருக்கக்கூடாதா என்று ஆசைப் பட்டிருக்கிறேன்.

பறவைகள் தமது குஞ்சுகளுக்கு 'சீதனம்' சேர்த்துக் கொடுப்பதுமில்லை — வாங்குவதுமில்லை — மனிதனே சீதனத்துக்காக உயிரையே விடுகிருன்!

பறவைகளுக்கு சாதி வேறுபாடு, சமய வேறுபாடு எதுமில்லை — மனிதனே சாதி சமயம் பேசி மோதிக்கொள்கிருன்!

தனது கூட்டில் வளருவது குயில் குஞ்சு என்று தெரிந்ததும், காகம் கொத்தி விரட்டி விடுகிறது. ஒவ்வொரு இனமும் தனது தனித்துவத்தையும்,தாயகத்தையும் காத்திடவேண்டுமென்று இதன் மூலம் காகம் மனிதனுக்கு கற்றுத் தருகிறது.

பறவையிடமிருந்து தமிழன் படிக்க வேண்டிய மிக முக்கியமான பாடமொன்றுண்டு. பறவை முழு முயற்சி செய்து தனக்கென தனியாக கூடு கட்டிக்கொள்கிறது.

ஆனுல் தமிழனே தனக்கென உலகில் ஓர் நாடு அமைத்துக் கொள்ளாமல் நாளைக் கடத்திக்கொண்டிருக்கிருன்!

தமிழனுக்கு ஒரு நாடு என்று நினைக்கும்போது பேரறிஞர் அண்ணாதான் என் நினைவுக்கு வருகிருர்:

உலகில் தமிழனுக்கென ஓர் நாடு வேண்டும் என்கிற விடுதலை எண்ணத்தை, தமிழனது நெஞ்சிலே முதன் முதலாக தூவி, அதை சீராக செழித்து வளரச் செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அல்லவா? அந்த அண்ணா, இதய மன்னன், தமிழ் நாட்டை ஆட்சி புரிந்து கொண்டிருந்த நேரத்தில், அவரது ஆட்சிச் சிறப்பு கண்டு அகம் குளிர தமிழகம் செல்லவேண்டுமென்று நான் நினைத்தது ண்டு. 1968ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் மாநாட்டுக்குசெல்லவேண்டுமென மெத்த ஆவலோடு தயாராக இருந்தேன். எனினும் என் எண்ணம் கைகூடவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு சம்பத் கோஷ்டி பிரிந்த நேரத்தில் கழகத்துக்கு ஏற்பட்ட சோதனைபோல, 1968ம் ஆண்டு நம்முடைய தமிழரசுக் கட்சிக்கும் ஒரு சோதனை ஏற்பட்ட காலம். நம்மோடு இருந்த சிலர், நம்மை விட்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பை நிராகரிப்போம்!

# தமிழரசு காணப் போராடுவோம்!!

அன்பு நண்பா,

ஈழத் தமிழினத்தின் வாழ்வுரிமையை மறுத்து — மானத் தமிழ்க் குலத்தை மண்டியிட வைக்கின்ற தாழ்வு நிலையை தமிழுக்குத் தருகின்ற, சிரற்ற சிங்களத்தார் செப்படி வித்தைதனை வேரற்றிடச் செய்யும் வழியதனைக் கண்டிடவும், இங்குள்ள தமிழர் நாம் எழுச்சிமிகக் கொண்டோம்; இன்பத் தமிழதனை எதுவரினும் இழந்திடோம்; இராவணன் எனும் தமிழன் ஆண்டிருந்தநிந்தநிலம்; எங்கள் தமிழ் முன்னோன், எல்லாளன், சங்கிலியன், இன்னும் பல மன்னர் ஈழத்தை ஆண்டதுண்டு; ஆண்டிருந்த பரம்பரை நாம் — அடிமைத்தனம் ஒப்போம்: மீண்டும் தமிழ் நிலத்தில் தனியாட்சி, தமிழாட்சி கண்டிடுவோம்; கொற்றம் அமைத்திடுவோம், அப்பணிக்கு எம் குருதியையும்கொட்டிடுவோம்; கோலத் தமிழ் மொழிக்கு வாழ்வு பெற்றுத்தந்திடுவோம்; ஆதிக்கக்காரர்களே உம் அடக்குமுறைக்கஞ்சோம்; வங்கம் நமக்கின்று வழிகாட்டி நிற்கிறது; என்று எழுச்சிப் பண்ணிசைத்தபடி இந்தக் கிழமை யாழ்நகரில் தமிழரசுப் பாசறை வீரர்கள் கூடுகின்றனர்! குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்திடுவதுபோல, கொந்தளிக்கும் விடுதலை உணர்வுடன் வீரத் தமிழினத்தின் பேரணி திரள்கிறது!

•

வரவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தினால் தமிழினத்துக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்களை எடுத்து விளக்கிட — அத்தகைய ஆபத்திலிருந்து நாம் மீள்வதற்குரிய வழிவகைகளைப் பற்றி சிந்தித்து முடிவெடுத்திட — முப்பத்தைந்து இலட்சம் தமிழ் மக்களின் இதயத்தில் மூண்டுள்ள எழுச்சியை — விடுதலை உணர்வை ஆட்சியாளருக்கும் உலக நாடுகளுக்கும் எதிரொலித்திட — நம்முடைய தமிழரசு சிறப்பு மாநாடு — பரணி பாடிடும் பாடிவீடாக — கொள்கை மறவர்களின் கோட்டமாக யாழ் நகரில் கூடுகின்றது இந்தக்கிழமை!

எந்தன் தமிழ்ச் செல்வி ஏனம்மா கலங்குகிறாய்; உந்தன் விலங்கொடிக்க உன் மைந்தர் தயாரம்மா; வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கொண்டோம்; எம் செங்குருதி தனிற்கமழ்ந்து வீரம் செய்கின்ற தமிழை எம் மூச்சாகக் கொண்டோம்; எங்கள் எலும்பை முறித்துக் கொடுத்தேனும், இன்னுயிரைத் தந்தேனும், ஈழமதில் உந்தனுக்கு வாழ்வு பெற்றுத் தந்திடுவோம்; சிங்களத் தோடுனக்கு சிங்காசனம் தந்திட சிறுமதியார் மறுத்திடினும், தனியாசனம் அமைத்து அதில் உன்னை அமர்த்திடுவோம்; நீ பெற்ற மைந்தரிலர், உன்னை விலை கூறிவிற்று, தாயாக உருமாறி நாடாள்வோர் இலை நக்கி, நத்திப்பிழைத்திடும் நரக நிலை கண்டு, நீ படும் வேதனையை நாமறிவோம் எம்தாயே; உன்னைப் பணயம் வைத்து [illegible] வாழ்வுதேடும் உலுத்தனம் படைத்தோர் கொட்டமடக்கிடுவோம்; வருங்காலம் நம் காலம்; வளமான பொற்காலம்; அடிமைத்தனம் துடைப்போம்; ஆட்சி அமைத்திடுவோம்; முடிசூட்டி களித்திடுவோம்; முத்தமிழே தாமுனக்கு; என்று வீரப்பண் இசைத்தபடி எண்ணற்ற இளைஞர்கள் — இயக்கத்தின் ஈட்டி முனைகள் குமுறும் உள்ளத்துடன் குழுமுகிறார் யாழ்நகரில்!

கோலேந்திகளின் கொடுங்கோலாட்சி கண்டு கொதிப்பேறியிருக்கும் இளைய தமிழ் உள்ளங்கள் எல்லாம் தம்முடைய மாநாட்டின் முடிவை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றன — செயலில் இறங்குவதற்கு! 'செய் அல்லது செத்துமடி' என்கின்ற வைராக்கியத்துடன் இலட்சோப லட்சம் தமிழர்கள் இன்று தந்தை செல்வாவின் நா அசைவுக்காக — சுட்டு விரல் கட்டளைக்காக காத்துக்கிடக்கிறார்கள்! வாழ்ந்தால் விடுதலைபெற்ற மக்களாகவே வாழ்வோம் — அன்றேல் விடுதலைப் போரில் வீழ்ந்து படுவோமே தவிர அடிமைகளாக வாழோம் என்கின்ற தீர்க்கமான இறுதி முடிவுக்கு இன்று தமிழ்க்குலம் வந்துவிட்டது!

ஆம் நண்பா, அத்துணைதூரம் தமிழ் மக்கள் பொறுமையின் இறுதி எல்லைக்கு இன்று தள்ளப்பட்டு விட்டார்கள்! அடிக்க அடிக்கப் பந்து மேலே மேலே உந்துவது போல — பூனையும் தாக்கப்பட தாக்கப்பட புலியாக மாறிச் சீறுவதுபோல — தமிழனும் கடந்த 23 ஆண்டுகளாக நசுக்கப்பட்டு, உரிமை பறிக்கப்பட்டு — நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து — விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டுவிட்ட நிலையினை இன்று காண்கின்றோம்!

•

அந்நியன் இந்நாட்டில் காலடியூன்று முன்னர் இந்நாடு ஒன்றாக இருந்ததில்லை — நாமறிவோம்; வரலாறு தருகின்ற மறுக்கொணா உண்மையிது! தமிழினத்தார் தனியாக தம் நிலத்தையாண்டிருந்தார்; தம் மொழியை வளர்த்து வந்தார்; தலைநிமிர்ந்து வாழ்ந்திருந்தார் அற்றை நாளில்! சிங்களத்தாரும் அதேபோல் தனியாக வாழ்ந்துவந்தார்! இதனாலே மோதல்களும் பேதங்களும் மூளவில்லை அன்று! ஓரினத்தை மற்றோர் இனம் அடிமையாக்க முடியவில்லை!

அந்நியன் வந்தான்! தமிழரசையும், சிங்கள அரசுகளையும் அடிமைப் படுத்தினன்! தனது நிர்வாக வசதிக்காக தமிழ் மொழி நாட்டையும், சிங்கள மொழி நாட்டையும் இணைத்தான்! 'சிலோனை' உருவாக்கினன்! சிங்களரும் செந்தமிழரும் 'அந்நியன்' என்ற பொது எதிரிக் கடிமையாயினர்!

பொது எதிரியாம் அந்நியரை விரட்டிட இணைந்தனர் தமிழர்களும் சிங்களரும்! சேர் பொன் இராமநாதனும், அருணாசலமும் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்புப்போரில் தலைமை தாங்கினர்—ஆங்கிலரை அகற்றிடின் தமிழர் மீண்டும் வாழ்வும் வளமும் பெற்றிடுவர் எனும் முழு நம்பிக்கையுடன்! ஆனால் நண்பா, வெள்ளையன் அகன்றதும் அவனது சப்பாத்துக்குள் மற்றோர் கொள்ளையன் நுழையப்போகிறான் என்பதை அவர்கள் அன்று எதிர்பார்த்திருக்கவில்லை!

வெள்ளையர் ஆட்சி 1948ம் ஆண்டுடன் அகன்றது! வெள்ளையன் இந்நாட்டை விட்டுச் செல்கின்ற நேரத்தில், அவன் இந்நாட்டைப் பிடித்திடும்போது எந்தெந்தப் பகுதிகளை யார் யாரிடமிருந்து கைப்பற்றினானோ அவர்களிடமே அந்தந்தப்பகுதிகளை ஒப்படைத்துச்சென்றிருக்க வேண்டும்! அதுவே நீதி! அதுவே நியாயம்; அப்படிச்செய்திருந்தால்—தமிழினம்இன்று அடிமை

## யாழ் நகரில்

## நமது மாநாடு!

## விடுதலை வீரர்களின் பாடி வீடு!

நிலைக்குதள்ளப்பட்டிருக்காது! ஆனால் ஒற்றைக் கண் சோல்பரியோ ஒருகண்ணால்பார்த்து அநீதி வழங்கினான்! ஓரவஞ்சகம் புரிந்தான்! ஆண்டிருந்த தமிழ்ச்சாதியை அடிமைப்படுத்தி—ஆளப்படும் இனமாக்கி—அழித்தொழிக்கும் சதியில் சிங்களஇனம் இறங்கக்கூடியமுறையில் அந்தஇனத்திடமே அதிகாரம் அனைத்தும் தந்தான்! தமிழர்களைச் சிறு பான்மையினராகவும், சிங்களரைப் பெரும்பான்மையினராகவும் கொண்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பொன்றை இங்கு திணித்தான்! ஆம் நண்பா, இந்த ஒற்றையாட்சி அரசியலமைப்புத்தான், நம்மை எண்ணிக்கையில் சிறுபான்மையினராக்கி, ஆளப்படும் இனமாக்கி, அழித்தொழித்திடும் கருவியாக பயன் படுத்தப்பட்டு வருகிறது இன்று வரை!

அன்றிருந்து—1947ம் ஆண்டிலிருந்து ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு எதிராக ஈழத் தமிழினம் தொடர்ச்சியாகப் போராடி வருகிறது! சிங்கள மக்களைப் பொறுத்தவரை 1947ம் ஆண்டுடன் அவர்களது விடுதலைப் போராட்டம் முற்றுப் பெற்றுவிட்டது! ஆனால் தமிழ் மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டம், 1947 உடன் முற்றுப்பெற்று விடவில்லை—தொடர்ந்து இன்று வரை நடைபெற்று வருகிறது! இழந்துபோன தன்னாட்சியை தமிழினம் எப்பொழுது மீண்டும் பெறுகிறதோ அன்றே தமிழன் நடத்தும் விடுதலைப்போர் முற்றுப் பெற முடியும்!!

• 1947ம் ஆண்டு வெள்ளையன் ஆட்சி அகன்று—அந்த இடத்தில் சிங்கள ஆட்சி அமர்ந்த பின்னர், ஈழத்தமிழ்க்குலம் எப்படி எப்படியெலாம் நசுக்கப்பட்டு வந்திருக்கின்றதென்பதனை நீ அறிவாய்—இருந்தும் சுருக்கமாக கூறுகிறேன் கேள்!

[illegible] நிலம் [illegible] விசர்வையாக்கி, உடலை எருவாக்கி, மலையகத்தை குபேர புரியாக்கி வைத்த 15 இலட்சம் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளை கொடுமை மிகு சட்டங்களால் பறித்தெடுத்து அந்த ஏழைத்தமிழ்த்தொழிலாளர்களை அரசியல் அனாதைகளாக்கி, 'நாடற்றவர்' என்றும் 'கள்ளத்தோணி' என்றும் பட்டம்சூட்டி நடுத்தெருவில் தவிக்க விட்டிருக்கிறது சிங்கள ஆட்சி! இன்று அந்த மக்கள் உழைத்தும் உரிமையற்றோராய், கல்வியுரிமை, தொழில் உரிமை, காணிபெறும் உரிமை, மொழியுரிமை போன்ற அத்தனை உரிமைகளும் இன்றி, நடுத்தெரு நாராயணர்களாக தவித்திடும் நிலை கண்டு இரங்காத மனித மனம் எங்குமில்லை,—இங்கு தவிர! மாடுகள் போல்— ஆடுகள்போல்—மந்

## அரசியல் மேடை

தைகள் கூட்டம்போல்—மானத் தமிழ் மறவரவர் ஒதுக்கப்படுதல் கண்டு உள்ளம் கொதித்திடாதோர் உண்மையிலே தமிழரல்லர்—அன்னார் மனிதருமல்லர்!

பட்டிப்பளை ஆறு என்றோர் பழந்தமிழ் ஆறு ஒன்றுண்டு கிழக்குத் தமிழ் நாட்டில்—கேட்டுப்பார் தெரியுமா என்று இக்கால இளைஞர்களை! தெரியாதென்பர் உடனே! ஆம் "கல்லோயா" தான் அவர் அறிவார்! பட்டிப்பளை எனும் தமிழ் ஊர்தான் சிங்களக் குடியேற்றத்தால் பெயர் மாறி 'கல்லோயா' ஆகிற்றென்ற உண்மை அவர் அறியார்! தமிழர் தாயகமாம் அல்லையிலும், மூதூரிலும், கந்தளாயிலும் பதவியாவிலும் சிங்களரைத் திட்டமிட்டு கொண்டு சென்று குடியேற்றி, தமிழர் நிலத்தை அபகரித்திடும் சதி நடைபெற்று வந்திருக்கிறது சிங்கள ஆட்சியில் பல்லாண்டாக! இதன் பெறுபேறாக 'அம்பாறை' எனும் சிங்களத்தொகுதிகிழக்கில் உருவாகியது! மூதூரும் திருமலையும் பறிபோகும் ஆபத்து கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறது!

அடுத்துவந்ததுநம்மொழியுரிமைக்கும் ஆபத்து-1956ல்! சிங்களத்தை மட்டுமே நாட்டின் ஆட்சிமொழியாக்கி, செந்தமிழரை சிறுமைப்படுத்தும் சிங்களமொழிச் சட்டம் வந்ததுடன், தமிழர் அடிமையில் 'முழுமை' எனும் நிலைக்கு தள்ளப்பட்டனர்! அத்துடன் சிங்களத்தை மட்டுமே நீதிமன்ற மொழியாக்கும் சட்டமும் 1961ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது!

உத்தியோகம் வேண்டுமா? சிங்களதேர்ச்சி வேண்டும்; பதவி உயர்வு வேண்டுமா? சிங்களத்தேர்ச்சி வேண்டும்; சம்பள உயர்வுவேண்டுமா? சிங்கள தகுதிகாண் பரீட்சையில் சித்திபெற வேண்டும்; என்றெல்லாம் ஒருபுறத்தில் கட்டுபாடு; மறுபுறமோ சிங்களவனாகப் பிறந்தவனுக்குத்தான் உத்தியோகம், பதவி உயர்வுகள்; சிங்களவனுக்குத்தான் உயர்கல்வியுரிமை; சிங்களவனுக்குத்தான் இந்நாட்டு வர்த்தகத்தில் முழு உரிமை, தொழில் உரிமை என்கின்ற பச்சை இனப்பாகுபாடும் இங்கு தலைதூக்கிவிட்டது! பல்கலைக்கழகப் பிரவேசத்தில்கூட சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே பெறவேண்டிய புள்ளியில் காட்டுமிராண்டித்தனமாக இனமொழி பாரபட்சம் காட்டப்பட்டதை நீ அறிவாயே நண்பா!

சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்தும்—தமிழுக்கு ஆட்சிமொழி உரிமைகோரியும் தமிழர்க்கு நீதிகோரியும் நாம் எத்தனை கிளர்ச்சிகளை, போராட்டங்களை கடந்த பதினைந்து ஆண்டுகளில் நடத்தியிருக்கிறோம்! காலிமுகத்திடலில் அறப்போர் — சிங்களத் திணிப்புக்கு எதிராக சிறீ எதிர்ப்பு சட்ட மறுப்பு போர், வடக்கு, கிழக்கு அரசாங்க அலுவலகங்களுக்கு முன்னால் அறப்போர் — தபால் சட்டத்துக்கு எதிராக சட்டமறுப்பு— ஹர்த்தால், கறுப்புக் கொடி, துக்கதினம் என்றெல்லாம் போராட்டங்களை நடத்தியிருக்கிறோம் என்றாலும், சிங்கள ஆட்சிக்கு நமது நேசக்கரத்தை நீட்டவும், சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவும் நாம் தயங்கியதுமில்லை! நியாயத்தனையின்பேரில் ஒத்துழைப்புத் தந்திடவும் பின்வாங்கியதுமில்லை!

சிங்களத் தலைவர்கள் நமது தலைவர்களுடன் அரசியல் ரீதியில் உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள அழைத்தபோதெல்லாம் நாம் அதைத் தட்டிக் கழித்ததில்லை! 1958ல் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா தமிழர் வாழ்பகுதிகளுக்கு சுயாட்சி வழங்கும் பிரதேச சபைகளை நிறுவவும், தமிழ் பிரதேசங்களின் உத்தியோக மொழியாக தமிழை

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குவதால்

# நாடு பிளவுபட்டு விடாது!

## சுயாட்சி மறுக்கப்படும் போதுதான் நாடு பிரியவேண்டி நேரிடும்!

### தமிழரசுக்கழக மாநாட்டில் தமிழக முதல்வர் கலைஞர் பேச்சு!



"சோவியத் குடியரசின் மாநிலங்கள் தனி உரிமையோடு இருக்கின்றன; இன்னும் சொன்னால், பிரிந்து போகும் உரிமையுடன்கூடிய மாநில சுயாட்சி பெற்றிருக்கின்றன!

"அந்தப் பிரிந்துபோகும் உரிமையை அல்ல - நாம் கேட்பது; மாநில உரிமைகளைக் காக்கும் சுயாட்சியைக் கேட்கிறோம்!

"அந்த சோவியத் நாட்டின் மாநிலங்களுக்குத் தனிக் கொடிகள் இருக்கின்றன; தேசியக் கொடியும் இருக்கிறது; அமெரிக்காவில்கூட மாநிலங்களுக்குத் தனிக் கொடிகள் இருக்கின்றன; இதனால், அந்த நாடுகளில் ஒருமைப்பாடு குலையவில்லை!

"அதுபோல், இந்தியாவிலும் மாநிலங்களுக்கு உரிமை வந்தால், பிரிவினை ஏற்பட்டு விடாது; 'அதிகாரப் பரவல் முறை' எனும் கொள்கைக்கு உரம் ஊட்டும் கோரிக்கைதான் அது!"

—இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தமிழரசுக்கழக வெள்ளி விழாவில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்; இத்தொடர்பில், மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

"'மாநில சுயாட்சி பெற வேண்டும்' என்று எங்கள் அண்ணன் எழுதி வைத்து விட்டுச் சென்றாரே —'மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறவேண்டும்' என்று அவர் உயில் எழுதி வைத்துச் சென்றாரே — அந்தக் கொள்கையின் வெற்றிக்காக அரசுக் கட்டிலிலிருந்து வெளியேற வேண்டி இருந்தாலும் அதற்கும் தயாராக இருக்கிறோம்!

"மாநில சுயாட்சி கேட்ட முஜிபுர் ரஹ்மான், இன்று சுதந்திர வங்காளத் தலைவராக விளங்குகிறார்கள்; அவரது கோரிக்கையை ஆதரித்துக் கைகொடுத்தது இந்திய அரசு! சனநாயகத்தின் குரலை அகில உலகமும் மதிக்க வேண்டும்' என்று வாதாடியது இந்திய அரசு!

சனநாயகத்தின் குரலை மதிக்காமல் யாஹியாகான் செய்த அக்கிரமத்தைக் கண்டித்துப் பாரிஸ் நகரிலும், மற்ற இடங்களிலும் முழங்கியவர் இந்திரா! அப்படிப்பட்ட சனநாயகத்திற்காக வாதாடிய பெருமைபெற்ற இந்திரா நமது மாநிலசுயாட்சிக் கோரிக்கையை ஆதரிக்கத் தவறுவார்கள் என்று எவரும் சந்தேகப்படத் தேவையில்லை; 'சனநாயகத்தின் குரலை மதிக்கவேண்டும்' என்று வாதாடிய சனநாயக உணர்வின் சின்னமான இந்திரா, நமது கோரிக்கையை எப்படி ஆதரிக்காமல் இருப்பார்? இந்திரா காந்தியாரின் சனநாயக உள்ளம் உறுத்தாதா? அவரது மனச்சாட்சி பேசாதா?

"யார் மாநில சுயாட்சி கேட்பது — கருணாநிதியா, நெடுஞ்செழியனா, சிவஞானமா" என்று மிரட்டுகின்ற பாணியிலா சனநாயகத்தின் காவலர்—ஆசிய ஜோதி பண்டித ஜவகர்லால் நேருவின் புதல்வி பேசுவார் - நிச்சயமாகப் பேசமாட்டார்! இந்திரா காந்தியாரின் உள்ளம் சனநாயக உள்ளம் மட்டுமல்ல - மென்மையான உள்ளம் படைத்தவர்!

'முஜிபுர்ரஹிமானின்கிழக்கு வங்கம்கேட்ட மாநிலசுயாட்சியை ஆதரித்த அவர், ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்காமல் நாம் கேட்கும் மாநில சுயாட்சியை ஆதரிக்காமலா போவார்!"

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மேலும் கூறியதாவது:—

"இந்தியா மேலும் வலுவடையத்தான் நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்கிறோம்.

முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு டில்லி சென்ற நான் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர்கள் கேட்டார்கள்— 'அதிகமான அதிகாரங்கள் கேட்டார்கள்... கேட்பது சுயநலம்தானே' என்று; 'இல்லை; பொதுநலம்; அதிகமான அதிகாரச்சுமையால் சிரமப்படும் மத்திய அரசின் சிரமத்தைக் குறைக்கத் தான் அதிகாரம் கேட்கிறோம்' என்றேன்;

இந்திய ஒருமைப்பாட்டிற்கு மாநில சுயாட்சிக் கோரிக்கை விரோதமானதல்ல; இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இருப்பதால்தான் யாரும் அளிக்காத முறையில், 'தமிழக அரசு சார்பில் ரூ: 10 கோடி நாட்டுப் பாதுகாப்புக்கு அளிப்போம்' என்று கூறினோம்;

இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இருப்பதால் தான்... தனது எளிமையான நிலையிலும் தமிழரசுக் கழகம், ரூ: 1,000 பாதுகாப்பு நிதிக்குத் தந்திருக்கிறது:

தொகை குறைவு என்றாலும், அதிலே அடங்கி இருக்கும் உணர்ச்சியை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தியப் பாதுகாப்புக்கு எதிரியாக யார் வந்தாலும்-எந்த அந்நியர் வந்தாலும், 55 கோடி மக்களும் ஆர்த்தெழுந்து எதிர்ப்போம்!

"ஆனால், நமது உணர்ச்சியைப் புரிந்துகொள்ளாதவர்கள், 'மாநில உரிமையும்-பிரிவினையும் ஒன்று' என்று திரித்துக் கூறுகிறார்கள்; மாநில உரிமை கேட்பதும் - பிரிவினையும் ஒன்று அல்ல!

நாம் கேட்பதெல்லாம், 'ஒன்றாக இருப்போம் - உரிமைகளோடு வாழ்வோம்' என்பதுதான்!"

## தமிழ்நாட்டுச் செய்திகள்

### பதவியிலிருந்து கலைஞர் வெளியேறினால்..



'இன்றைக்கு கலைஞர் அவர்களே, மாநில சுயாட்சிக்காக ஆட்சியை விட்டு வெளியேறவுந் தயார் என்று பேசுகிறார்கள்..

நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்— 'நீங்கள் ஆட்சியை விட்டு வெளியேறவேண்டாம்; இடத்தைக் காலி செய்தால் மடத்துக்குரியவன் வந்துவிடுவான்; நீங்கள் வெளியே வந்தால், தமிழுக்காக — தமிழர் நலனுக்காக — தமிழ் நாட்டுக்காக மேல்மட்டத்தில் வாதாட ஆள் இருக்காது; ஆகவே நீங்கள் ஆட்சியிலேயே இருங்கள்; தயவுசெய்து ஆட்சிக் கட்டிலிலிருந்து இறங்க வேண்டாம்!

"நாங்கள் உங்களுக்கு உந்து சக்தியாக இருக்கிறோம்; மாநில சுயாட்சிக்கு நாங்கள் போராடுகிறோம்; சிறைச்சாலையில் எங்களுக்கு இடம் கொடுங்கள்; உங்களை, தலைமைச் செயலகத்தில் வைத்தே உரிமை வாங்கித் தருகிறோம்"

— தமிழரசுக்கழக வெள்ளி விழாவில் ம. பொ. சி. பேசியது.

# "எங்கும் தமிழ்-எதிலும் தமிழ் எனும் நிலையை உருவாக்கத் தமிழர்கள் முன் வரவேண்டும்!"

## நாவலர் நெடுஞ்செழியன் அறை கூவல்!

'தெளிவோடு — திட்பத்தோடு—குழப்பமின்றி—வளையாமல் நெளியாமல்—பணியாமல் வீழாமல் கருத்துக்களைச் சொல்பவர் சிலம்புச் செல்வர்; இந்த ஆற்றல் எல்லோருக்கும் வராது;

சில பேர் எண்ணுவார்கள்; ஆனால் சொல்லத் தெரியாது; சொன்னாலும் எண்ணியதற்கு நேர்மாறான கருத்துக்களைச் சொல்வார்கள்; பத்திரிகைகளில் அந்தக் கருத்து வெளிவந்தால் "நான் அப்படி நினைத்துச் சொல்லவில்லை" என்பார்கள்.

சிலருக்குச் சிந்திக்கத் தெரியும்; ஆனால் சிந்திக்காமல் இருப்பார்கள்; அவர்கள் சோற்றுப் பிண்டங்கள்!

சிலர் சிந்திக்க அஞ்சுகின்றவர்கள்—அவர்கள் கோழைகள்!

சிலர் சிந்தித்ததை மாற்றிச் சொல்வார்கள்; அவர்கள் வஞ்சகர்கள்!

சிந்தித்ததை, சிந்தித்தபடி சொல்பவர்கள்தான் வீரர்கள்—விவேகிகள்! அந்த வரிசையில் இடம் பெறுபவர்தான் நம்முடைய சிலம்புச் செல்வர்;

நாம் படித்த வரலாறு, 'அயல் நாட்டான் வந்தான்' என்று தான் இருந்தது; அலெக்சாண்டர் வந்தான்—



பாபர் வந்தான் — தைமூர் வந்தான்—கோரி வந்தான்—கஜினி முகமது வந்தான்—என்றுதான் படித்தோம்.

ஏனென்றால் இராஜராஜ சோழன் போன்ற தமிழ் மன்னர்கள் 'சென்றார்கள்—வென்றார்கள்' என்ற வரலாறுகள் அப்போது மறைக்கப்பட்டிருந்தன; அப்படிப்பட்ட காலத்தில் வரலாற்றைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கட்டபொம்மன் வரலாற்றைச் சொல்லித் தமிழகத்திற்கு எழுச்சியை—உணர்ச்சியை ஊட்டியவர் ம. பொ. சி.!

எதிலும் தமிழ் — எங்கும் தமிழ்" என்ற நிலையை உருவாக்கத் தமிழர்களே முன்வரவேண்டும்;

இருபத்தைந்து — முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் ... கேலி செய்தவர்கள் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு நாம் கருத்துக்களைத் தந்திருக்கிறோம்.

இந்த எழுச்சி, வளர்கின்ற எழுச்சியே தவிர, குறைகின்ற எழுச்சியல்ல!

தமிழைவிட எல்லா வகையிலும் குறைந்த ஜப்பான் மொழி, எங்கும் — எதிலும் இருந்து ஆட்சி செய்யும் போது, எல்லா வளமும் உடைய தமிழ் எங்கும்—எதிலும் ஆட்சி செய்ய முயற்சித்தால் நிச்சயம் நடக்கும்!

ஜப்பானில் மருத்துவக் கல்வி முழுதும் ஜப்பான் மொழியிலேயே கற்பிக்கப் படுகிறது; 100 ஆண்டுகளுக்கு முன் தங்கள் தாய் மொழியில் ஜப்பானியர் இந்த ஏற்றத்தைப் பெறவில்லை! 100 ஆண்டுகளாக முயன்றும் ஆங்கிலத்தில்—இரஷ்ய மொழியிலுள்ள கருத்துக்களை ஏற்றுத் தங்கள் மொழியில் ஏற்றம் பெற்றிருக்கிறார்கள்!

நாம் நம் நாட்டில் கல்வியைத் தமிழில் சொல்லிக் கொடுக்க விரும்புவது, தமிழை வளம்படுத்த அல்ல; 'அறிவு வளரவேண்டும்' என்பதற்காகவே, 'தமிழில் பாடங்கள் கற்பிக்கவேண்டும்' என்கிறோம்.

தமிழ் வளருவது, காவியத்தால்—உரை நடையால்—நாடகத்தால் — கவிதைகளால்தான்!

—நாவலர் நெடுஞ்செழியன்.

## பாரதிதாசன் பாடல் புதுவை மாநிலத்தின் வாழ்த்துப் பாடல்!



'வாழ்விலே செம்மை சேர்த்தவள் நீயே' என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்பாடல் புதுவை மாநில அரசின் தமிழ் வாழ்த்துப் பாடலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது:

அரசு விழாக்களிலும் கல்வி நிலையங்களிலும் கடவுள் வாழ்த்துப் பாடலுக்குப் பதிலாக இதனையே பாடவேண்டும், என்று புதுவை அரசு உத்தரவிட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டுப் பாருங்கள்

இ: பெ. மனோகரன்
நுகேகொடை

கே: தினபதியாரின் நப்பாசைப்படி தலைவர் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குள் ஏதாவது தகராறு ஏற்பட்டு பிளவு உண்டாகுமா?

ப: 'பிளவு'களை தேடி அலைவது தினபதியாரின் பிறவிக் குணம்: ஆனால் கட்சி ஒரு போதுமே பிளவு படாது.

ஃ

செல்வகுமார்
பசார்வீதி
செங்கலடி

கே: என்னுடைய சினேகிதன் பிள்ளைக்கு பெயர் வைக்கவேண்டும், பொன்னம்பலம், குமார சூரியர் மார்டின், ராஜன், இந்தப்பெயர்களில் நல்ல ஒரு பெயரைச் சொல்லவும்?

ப: ஏன், உங்கள் சினேகிதர் மகனும் ஒரு தமிழ்த் துரோகியாக வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு

கே: முஸ்லிம்களின் போதனுமொழி சிங்களமாக இருக்கவேண்டுமென்று முஸ்லிம் தலைவர் எனப்படுவோர் பலர் கூறுகின்றனரே! அதைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: மதத்தை விட மொழியே பெரிது என்ற பெரிய தத்துவத்தை எடுத்துக்காட்டி வெற்றியீட்டியுள்ளார் ஓர் இஸ்லாமிய ரான ஷேக் முஜிபுர் ரஹுமான். முஜிபுர் காட்டிய வழியைப் பின்பற்றி தமிழைத் தாய்மொழியாக கொண்ட இந்நாட்டு இஸ்லாமியர்கள் தமிழையே தங்கள் போதனுமொழியாக கொண்டார்களானல், இஸ்லாமிய சமுதாயம் முன்னேற முடியும். சிங்களத்தை ஏற்ருல், காலப் போக்கில் தனது தனித்துவத்தை இழந்து விடும்! முஜிபர் காட்டிய வழியை தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் பின்பற்றவேண்டுமென்பதே என் விருப்பம்!

கே: வங்காளதேசத்தைப் பெறுவதில் வங்காளிகள் காட்டிய வீரமும், இன விடுதலை உணர்ச்சியும் இலங்கைத் தமிழர்களிடமும் உண்டு என நீங்கள் நம்புகிறீர்களா?

ப: இன்று இல்லாவிட்டாலும் நாளை ஏற்பட்டே தீரும் என்பதில் அசையாத நம்பிக்கை எனக்குண்டு!

ஃ

எஸ். ஜே. வி; ராஜகுமார்
மாதகல்

கே: தமிழரசுக் கட்சியில் சேருவதற்கான விண்ணப்ப பத்திரத்தை சுதந்திரன் பிரசுரிக்குமா?

ப: சுதந்திரனில் பிரசுரிப்பது சாத்தியமில்லை. உங்களூர் கிளை மூலமாக கட்சியில் சேர விண்ணப்பிக்கலாம்!

ஃ

ப். சோமசுந்தரம்
குப்பிளான்

கே: கோவை அண்ணு எங்களூரில் நடந்த தமிழ் விழாவுக்கு வந்து உரையாற்றினரே, அவர் உங்களிடம் எங்களூரைப் பற்றி என்ன குயுக்தியாரே சொன்னர்?

ப: 'குப்பிளான் — தமிழ் மொழியை குப்புற விழ விடான்' என்று சொன்னார்!

வவுனியன்
வவுனியா

கே: சமஷ்டி அரசு கோரி போராட்டம் நடைபெறும் போது தந்தை செல்வா சிறை வைக்கப்பட்டால்— ஐக்கிய முன்னணியை சேர்ந்த பொன்னம்பலம், துரையப்பா, மும்மூர்த்திகள் யார் பக்கம் ஆதரவு அளிப்பார்கள்?

ப: 'ரஸாக்கர்' படையாக இயங்குவார்கள்!

ஃ

செ: அருள்மோகன்
தையிட்டி
காங்கேசன் துறை

கே: தினபதியார் இனியாவது உளருமல் இருக்க மாட்டாரா?

ப: நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

ஃ

அழகரெட்ணம்,
நாவிதன்வெளி.

கே: ஆனந்தசங்கரி அவர்கள் 17-11-71 அன்று நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய சந்தர்ப்பசோசலிசபேச்சைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஆனந்தம் சங்கரிக்கு! அவமானம் தமிழினத்துக்கு!

ஃ

க: ச: நடராசா,
காரைநகர்.

கே: தற்சமயம் வ: பொ: என்ன செய்கிருர்கள்?

ப: வம்பும், பொய்யும் சபைக்கேருது என்பதை உணர்ந்து மூலையில் முடங்கிக்கிடக்கிருராம்!

ஃ

புரட்சிதாசன்,
தொண்டைமாஞறு:

கே: கிழக்குப் பாகிஸ்தான் பிரிவினைக்கும், இந்திய பாகிஸ்தான் யுத்தத்திற்கும் காரண கர்த்தா ஜனுப் பூட்டோ என்கிறேன் நான். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: நிச்சயமாக!

ஃ

அ: செபரெட்ணதாஸ்,
10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்;

கே: இலங்கை பிரதமருக்கும் இந்தியப் பிரதமருக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: இருவரும் பெண்கள் என்பதில் ஒற்றுமை; முன்னவரிடம் பெறமுடியாத ஒன்று பின்னவரிடம் இருக்கிறது — அதற்குப் பெயர்தான் நீதி. இது வேற்றுமை!

ஃ

இருபாலையூர் நேசன்,
கோப்பாய்.

கே: இலங்கை அரசியலில் தமிழனுக்கு கிடைப்பது எது? கிடையாதது எது?

ப: கிடைப்பது ஏமாற்றம்- கிடையாதது நீதி!

கே: இலங்கை அரசியலில் நீர் கண்டது எது காணுதது எது?

ப: கண்டது வாக்குறுதிகள் மீறப்படுவதை! காணுதது வாக்குறுதிகள் காப்பாற்றப்படுவதை!

ஃ

சபா: சபேசன்,
பாண்டிருப்பு-2
கல்முனை.

கே: தமிழுலகின் [illegible] காலத் தலைவர்களான இலங்கைத் தமிழ் மாணவர்கட்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: தமிழ் சமுதாயத்தில் முளைவிட்டுள்ள களைகளை கண்டறிந்து அவற்றைப் பிடுங்கும் முயற்சியில் முதலில் ஈடுபடுங்கள் என்பதே!

ஃ

தி. பன்னீர்ச்செல்வம்,
அச்சுவேலி வடக்கு:

கே: யாழ் மேயர் அல்பிறட் துரையப்பாவின் அரசியல் மருடியைப்பற்றி உங்களின் அபிப்பிராயம் என்ன?

ப: 'ம' வும் குடியும்தான் அவரது மகுடிக்கு பின்னணியாக விளங்குகின்றன!

ஃ

சி: இ: வசந்தவல்லி,
அல்வாய் தெற்கு.

கே: யாகியாகான் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: சுதந்திர வங்கத்துக்கு கால்கோள் நாட்டியவர் என்று நினைக்கிறேன்!

கே: 2071ல் யாழ்ப்பாணம் எப்படியிருக்கும்?

ப: சுதந்திரத் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்ருக இருக்கும்!

கே: உலகெலாம் வாழும் தமிழ் இனத்தின் முடி மன்னனுக உங்களை நியமித்தால் என்ன செய்வீர்கள்?

ப: எனது முடியை திருப்பதியில் சென்று எடுத்திடுவேன்!

ஃ

இ. சுப்பிரமணியம்,
கொழும்பு-5.

கே: சுயாட்சிக் கழகத்தின் கொள்கையென்ன?

ப: அது என்னவென்பது அதை உருவாக்கியவர்களுக்கே தெரியாது! 'பூரண சுயாட்சியே தமது கொள்கை என்கிறது அக்கட்சியின் ஏடு. ஆனல் கழகத்தின் கொள்கைப் பிரகடனத்திலோ 'மாட்சிமை தங்கிய மகாராணியின் ஆதிபத்தியத்துக்குட்பட்ட 'சுயாட்சி' தமது குறிக்கோள் என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது சிங்கள ஏகாதிபத்தியத்தை ஒரு பக்கம் எதிர்த்துக்கொண்டே மறுபக்கம் என்ருே ஒழிக்கப் பட்டுவிட்ட ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு புதிதாக மீண்டும் அடிமைப்பட ஆசைப்படுகிருர்கள்: இது என்ன சுயாட்சியோ? இது என்ன விடுதலை உணர்வோ?

ஃ

ஜெயன்,
மாதகல்.

கே: நாட்டின் முன்னேற்றத்துக்கு தடைக்கல்லாக இருப்பது எது?

ப: அரசியல் வாதிகளின் நாக்கு!

கே: கருணையின் வடிவம் எது?

ப: கண்ணீர்!

வெட்டிஒட்டப்பட
வேண்டிய முகவரி—
திருவாளர் குயுக்தியார்,
பே/பா சுதந்திரன்,
194 ஏ- பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12.

# எழு தமிழா! எழு நீ இன்றே!

"தமிழேந்தி"

போருக்குப் புலியெனவே பாய்ந்து சென்று
புண்ணூறு உடல்பெறவே பொருதி நின்று
மார்புக்கு வேல்தாங்கும் வேலை தந்த
மானத்தைக் காத்த தமிழ் வீரமெங்கே?
வாளுக்குத் தலை தரினும் அஞ்சோம்; எங்கள்
வாழ்வுக்கு வழி சமைக்க வந்தோம்; மாற்ருர்
தாளுக்குப் பணியோம்; யாம் தமிழரென்று
தலைநிமிர்ந்தெழு தமிழா! எழு நீ இன்றே!

பிறந்தவுடன் பிறந்த பசி வயிற்றைக்கிள்ள
பிஞ்சழுகைக் குரல்கேட்டு முலைகள் தாக்கி
சுறந்த பாலொடு கலந்து அன்னை தந்து
களைப் பழகிக் களித்த செந்தமிழுக் கின்று
சிறந்த பெரு வாழ்வெல்லாம் சீரழிந்த
சிறுமையினைக் கண்டும் நாம் சிரிப்பதோடா!
இறந்திடினும் இலட்சியத்தை ஏற்று நின்று
இடர்முடிக்க எழுதமிழா! எழு நீ இன்றே!

ஏர்பூட்டி நிலமுழுத இரும்புக் கைகள்
இன் தமிழின் எழுச்சியினைப் பாடுந்தோள்கள்
ஆர்வந்து தடுத்திடினும் ஓய்வதில்லை!
அன்னை மொழிப் பகைமுடித்தே அமைதிகாணும்!
யார் திரண்டெதிர்த்தாலும் இதனைக் கூறி
பரம்பரையாய் வந்த தமிழ் வீரம் காட்டி
ஊர் முழுதும் சென்றுரிமைப் போர் நடத்த
உணர்ச்சியொடு எழு தமிழா! எழு நீ இன்றே!

தேனினிமைத் தமிழ்மொழியைத் தீயோர் வந்து
தீண்டுதலைத் திரமுடன் எதிர்த்தே நின்று
ஊனுருகி உருக்குலைந்தும் உள்ளம் சோரா
உணர்ச்சிமிகு படைத்தலைவன் தந்தை செல்வா
தானுருகி அழிந்திடினும் தமிழர் வாழத்
தருகின்ற கட்டளைகள் தலைமேல் தாங்கி
வானதிரப் படை செலுத்தி வாகை சூடி
வாழ்வதற் கெழு தமிழா! எழு நீ இன்றே!

# இதயமே செத்துவிடு!

—வட்டூர் பங்கய மணாளன்.

வாழ வழிகெட்டு வந்தவரின் கால் நக்கிக்
கோழை மனிதரெனக் கொள்கை பறக்கவிட்டு
வாழுகின்ற கூட்டத்தில் வந்து பிறந்துவிட்டேன்
ஏழையிதயமே நீ ஒரு பொழுது செத்துவிடு!

நாளும் பொழுதும் நம்முரிமை பறிக்கின்ற
பாழ்பட்ட நம்மரசு படுத்துகின்ற பாடெல்லாம்
கேளாமல் அவருடனே கூடிக்குலவுகின்ற
நாளினிலே வாழ்கின்றேன் இதயமே செத்துவிடு!

தங்கத் தமிழிளைஞர் தரமான வாழ்வுதனைப்
பங்கப் படுத்தித் 'தரப்படுத்தல்' செய்தவர்க்கு
தங்கப் பரிசளிக்கும் தலை கெட்ட தமிழினத்தில்
தங்கியிருந்துவிட்டேன் இதயமே செத்துவிடு!

பொன்னுன மொழியிருக்கப் பேசி வந்த நாவிருக்க
கன்னுன மொழியென்று மேல்நாட்டார்
புகழ்ந்திருக்க
மண்ணை யெடுத்தே வாயிலடைக்கின்றார்
உன்னுணே ஒருபொழுது இதயமே செத்துவிடு

தாய் வைத்த பெயர்மாற்றித் தாசிக்கு மகனுக்கு
நாய்க்கு நாம் வைக்கின்ற 'பண்டா' பெயர் சூட்டி
பாய்ந்து சென்று பதவிக்குப் பந்தம் பிடிக்கின்ற
"தேய"த்தில் வாழாதே இதயமே செத்துவிடு!

இந்த நிலையினிலே இனியும் நீ உடனிருந்தால்
எந்தனுயிர் தாங்காது ஏழையெனைக்
கொல்லுகின்ருய்
சந்தையிலே யுன்னோடு மானத்தை விற்றவரே
இந்தவொரு ஈழத்தில் வாழ்ந்திடலாம் செத்துவிடு!

# புறப்படு தமிழா

"இருள்குழி சிவகுருநாதன்"

தூங்காதெழுந்திடு தமிழா — நாட்டின்
துயரது துடைத்திடு தமிழா
எங்கும் தமிழொலி முழங்க — நீயும்
எதிர்த்து நின்றுழை தமிழா

மூன்று வர்ணக் கொடியால் எங்கள்
மூத்த தமிழை வளர்க்கும்
அன்புத் தலைவன் அணியில் — நீயும்
என்றும் நின்றே உழைப்பாய்

மனதில் தூய்மை கொள்வாய் — உன்
மானமே உயிரெனச் சொல்வாய்
இனமே காத்திட நீயும் — ஒன்ருய்
இணைந்தே புறப்படு தமிழா

தங்கத் தமிழன் நீயாய் — சீறும்
சிங்கத் தமிழன் நீயாய்
எங்கள் இனத்தைக் காக்க — நீயும்
இன்றே புறப்படு தமிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாபா படுன'த்தில் 'சிங்களோ-தெமிழ'ர்கள்

# தமிழைக் 'கொன்று ஆடி'ய இழிவு விழா!

அரசாங்க ஆதரவில் — கலாசார 'அமைச்சின் கீழ் இயங்கும் 'இலங்கை கலாச்சாரப் பேரவைக்கு' இன பேதமோ கட்சி பேதமோ கிடையாதாம்! இலங்கையில் எந்த மொழியிலேனும் எழுதும் எந்தத் துறையிலேனும் படைக்கும் கலைஞர்கள் யாவரையும் ஒரேமாதிரியாக அங்கீகரிப்பதே அதன் நோக்கமாம்!

இப்படியாக யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற கலாச்சாரப் பேரவையின் தமிழ் இலக்கிய விழாவிலே கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு குலதிலகா அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்கள். தட்டிக்கேட்க அங்கு ஆளில்லை என்ற துணிவில்தான் போலும் அமைச்சர் அப்படி ஒரு படு பொய்யை அவிழ்த்துவிட்டார்.

கடந்த ஆண்டில் வெளியான சிறந்த சிங்கள நூல்களை எழுதியவர்களுக்கும் சிறந்த தமிழ் நூல்களை எழுதியவர்களுக்கும் பரிசாக கலாசாரப் பேரவை வழங்கிய பணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் பேரவை போற்றிய இன பேதம் புரியும்.

யாழ்ப்பாணத்தில் அவர்கள் நடத்திய இலக்கிய விழாவைப் பார்த்திருந்தால் பேரவை கடைப்பிடித்த கட்சிபேதம் தெரியும். (விழாவுக்கு வராத பேறுபெற்றவர்கள் அவர்களது அழைப்பிதழைப் பார்த்தாலே போதும்)

இலக்கிய விழாவில் கலந்து கொள்ள அழைக்கப்பெற்றவர்கள், விழா மலரில் 'விடயதானம்' செய்தவர்கள் எல்லோருமே ஒரு குறிப்பிட்ட அணியைச் சேர்ந்தவர்கள். அந்த அணிக்குப் பெயர் மூனுப். போனு. எஸ். பொ. பாணியில் சொல்லுவதாயிருந்தால் முட்டை போடுகிற எழுத்தாளர்கள். (அழைப்பிதழ்கள்கூட தமது தொண்டர்களுக்கும் தொண்டர் அடிப்பொடி ஆள்வார்களுக்கும் மட்டுமே அனுப்பப்பெற்றதாகத் தெரிகிறது)

விழா அமைப்பாளர்களுக்கு, விழா மிகச் சிறப்பாக அமைய வேண்டும். அதனால் பொது மக்கள் மத்தியில் ஓர் இலக்கிய விழிப்புணர்ச்சி உண்டாக வேண்டும் என்பதிலெல்லாம் அக்கறை இருந்ததாகத் தெரியவில்லை.

எவ்வாறாலும் சரி எக்கேடு கெட்டாலும் சரி தம்மவர்கள்தான் அதில் பங்குபற்றவேண்டும் என அவர்கள் ஆலாய்ப் பறந்திருக்கிறார்கள்; தலைசிறந்த தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் விமர்சகர்களும் எம் மத்தியில் இருக்கும்போது கனிகள் இருக்க காய்கள் கவர்ந்திருக்கிறார்கள். கவி அரங்கு என ஒன்று நடந்தது. அதில் எமது முன்னணிக் கவிஞர்களான காசி. ஆனந்தன், காரை சுந்தரம்பிள்ளை, சந்தவனம், மதுரகவி, சி. நாகராசன், அம்பி போன்றவர்களில் ஒருவரையுமே காண முடியவில்லை; ஏதோ மூனுப். போனுக்களைக்கொண்டு முடித்திருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் — அதாவது இலங்கை முழுவதும் சல்லடை போட்டுத் தேடித் தமது ஆட்களைக்கொண்டு வந்தும்கூட பற்றாக்குறை தான்; பலர் இரண்டு தட-

## முக்கூட்டு ஆட்சிக்கு முட்டுக் கொடுக்கும் 'மூனுப் போனு'க்களின் மலட்டு விழா!

வைகள் கூட ஏறி சோடாவால் தொண்டையை நனைத்துக்கொண்டு தொண்டை கிழியக் கத்தினார்கள்.

### சிங்களோ — தமிழ் விழா

இரத்தினபுரியில் சென்ற மாதம் நடைபெற்ற கலாசார விழாவில் தமிழுக்கு எந்தவித இடமும் வழங்கப் பெறவில்லையாம். ஆனால் நமது 'அடிமை'கள் நடாத்திய விழாவில் சிங்களத்துக்கு 'உரிய' இடம் கொடுக்கப் பட்டிருந்தது!

அவர்களது அழைப்பிதழில் முன் பக்கத்தில் முதலிடம் சிங்களத்துக்குத்தான்! யாழ் மாநகர சபை மண்டபத்துக்குள் அமைச்சர்கள் நுழையும்போது ஒலித்தது சிங்கள இசையே! ஆங்கிலம் தெரிந்தபோதிலும் அமைச்சர் குலதிலகா பேசியது சிங்களத்திலேயே! சூரியரும் தாம் ஒரு சிங்கள அடிமை என்பதை அவையடக்கத்தைச் சிங்களத்திலும் சொல்லியது மூலம் காட்டிக் கொண்டார். அத்தோடு அவரது காலைப்பேச்சு முழுவதும் சிங்களத்திலும் மொழி பெயர்த்துக் கூறப்பட்டது. போதாக் குறைக்கு திரு. கே. ஜி. அமரதாசவையும் இரண்டு தடவைகள் தமிழ் வாசிக்கவிட்டுத் தமிழைக் கொலை செய்திருக்கிறார்கள்.

இந்த இடத்தில் தான் எமக்கு அந்தத் தீர்மானம் நினைவுக்கு வருகிறது: வட பிரதேச கம்யூனிசுட்டுக் கட்சி 'தனிச் சிங்களம் ஆட்சி மொழியாக்கப் பட்டிருப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்றும் 'சிங்களத்தைத் தமிழ் மக்களிடம் புகுத்தும் பொறுப்பைத் தாம் ஏற்பது' என்றும் சென்றமாதம் தீர்மானம்

### 'போனுச் சாறு'

எடுத்திருந்தது அல்லவா? அதன் தொடக்க விழாத் தான் இந்தத் தமிழ் விழாவோ?

### யாபா படுன

இனி விழா நிகழ்ச்சிகள் பற்றி மேலோட்டமாக கவனிப்போம்:

விழாவினைத் தொடக்கி வைத்தவர் கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு எஸ். எஸ். குலதிலகா அவர்களாவர். அவர் தமது பேச்சை எப்படித் தொடங்கினார் என்பதை மட்டும் தொட்டுக் காட்டிவிட்டு அப்பால் செல்லுகிறேன்.

'புத்த பிரானின் திருவடிகள் பட்டுப் புனிதமடைந்த நாகதிபத்தைத் தன்னகத்தே கொண்ட 'யாபா படுன' என்ற பெயரில் வரலாற்றிலே இடம் பெற்றுள்ள இப் புராதன நகரத்தில் இன்று நடைபெறும் தமிழ் இலக்கிய விழாவில்......'

### பொருத்தமானவர் வெளியிட்ட மலர்

விழாவிலே ஒரு மலரும் வெளியிட்டு வைக்கப்பெற்றது. அதனை அறிமுகம் செய்து வைத்தவர் திரு. நா. சோமகாந்தன். வெளியிட்டு வைத்தவர் மாண்புமிகு செல்லையா 'குமாரசூரியர். அறிமுகம் செய்து வைத்தவர் தமது பேச்சு முடிவில் அமைச்சரைப் பார்த்து 'இம் மலரை வெளியிட இவரைவிடப் பொருத்தமானவர் இந்த மேடையில் வேறு எவரும் இல்லை' என்றார் இதனைச் சிலர் நகைச்சுவையாக நினைத்துச் சிரித்தார்கள்; வேறுபலரோ 'உண்மையே அதுதான்' எனவும் எண்ணினார்கள்.

ஏனென்றால் அச்சமயம் மேடையிலிருந்த திருவாளர்கள் அல்பிரெட் துரையப்பா, எம். சி. சுப்பிரமணியம், கே. ஜி. அமரதாச, விமல் அமரசேகர, அமைச்சர் குலதிலக்க ஆகியோர்களைவிட சூரியருக்கு தமிழ் இலக்கியம் பற்றி அதிகம் தெரியும் எனப் பேச்சாளர் எண்ணியிருக்கலாம்; மேடையில் இருந்த மற்றும் இருவர்களான கலாநிதிகள் சிவத்தம்பி, கைலாசபதி ஆகியோர்களை, அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றைத் திரித்தும் இருட்டடிப்புச் செய்தும் வருவதால் அவர்களை சோமு பொருட்படுத்தவில்லை போலும்!

அமைச்சர் குமாரசூரியர் மலரை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் 'மலரை'யும் மறந்து தம்மையும் மறந்துவிட்டார்! தமது சு. கட்சித் தொண்டர்கள் மத்தியில் பேசுவதாக எண்ணிக் கொண்டோ என்னவோ என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் நீண்ட நேரம் வெளுத்து வாங்கிவிட்டார்.

மாதிரிக்காக அவரது பேச்சின்போது உதிர்ந்த சில சிதறல்களை இதோ தருகிறேன்:-

'உதய சூரியனைத் தேடிச் செல்லும் தாமரை போல்...'

'தலையர்களும் தலையிகளும்...'

'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை போலாகிவிடும் ஆதலால் கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதுபோல எழுத்தாளர் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்...'

'துரைமார்களே! துரைச்சாணிகளே!...'

### உருப்படாத ஒருமைப்பாடு

காலை நிகழ்ச்சிகளின்போது இடம் பெற்ற கருத்தரங்கு கவி அரங்கு இரண்டுக்குமே எடுத்துக்கொண்ட பொருள் 'தேசிய ஒருமைப்பாடு' தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதற்கு பேரவைக்கு வாய்த்த இடம் யாழ்ப்பாணம்தானா? தேசிய ஒருமைப்பாடு ஏற்பட, மனம் மாறவேண்டியவர்களும் திருந்த வேண்டியவர்களும் தமிழர்களல்லர் என்ற மிகச் சாதாரண உண்மை கூடவா இவர்களுக்குப் புரியவில்லை?

கருத்தரங்கிலும் கவியரங்கிலும் 'எப்படி உண்மையான தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டி எழுப்பலாம்' என்று கூறக்கூடிய துணிவுள்ளவர்களையும் திறமையுள்ளவர்களையும் அழைக்க மறந்து விட்டார்கள். தம்மவர்களைக் கொண்டே பிரசாரப் போக்கில் 'சமா' வைத்திருக்கிறார்கள்.

எங்கோ இருக்கும் வங்காள தேசத்துக்காக இங்கு வெற்றிவிழாக் கொண்டாடக்கூடாதாம்! வட கிழக்கு மாகாணங்களுக்கு அமைச்சர்கள் வரும்போது அவர்களுக்கு எதிர்ப்புக்காட்டுவது அடுக்காதாம்! இலங்கை குடியரசாகும் நாளை குதூகலத்துடன் கொண்டாடவேண்டுமாம்! தமிழக ஏடுகள் திரைப்படங்களின் தடைகளையோ கட்டுப்பாடுகளையோ எதிர்க்கக் கூடாதாம்!— இதுவே ஒருமைப்பாடு ஏற்பட பேச்சாளர்களும் கவிஞர்களும் எடுத்தோதிய ஏற்றமிகு வழிகளாகும். ஆனாலும் கருத்தரங்கில் கலந்து கொண்ட திரு. இ. லக்ஷ்மணன் அவர்கள் மட்டும் துணிந்து பல நல்ல கருத்துக்களை (அவை அமைச்சர்களுக்கும் விழா அமைப்பாளர்களுக்கும் கசப்பாக இருந்த போதிலும்) வெளியிட்டார்கள்.

### ஒளிப்பதிவுக்காக ஒலிப்பதிவா?

யாழ் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற மாலை நிகழ்ச்சிகளில் சில காலை நிகழ்ச்சியின் ஒலிப்பதிவைத் திருப்பிப் போட்டதுபோல இருந்தது. இதனைக் கவனிக்கும்போது அரசாங்கத் திரைப்படப் பகுதியினரின் படப் பிடிப்புக்காகத்தான் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெற்றது போலிருந்தது.

குறிப்பு: காலை நிகழ்ச்சிகள் படம் எடுக்கப்படவில்லை;

விழாவில்பாராட்டப்பெற விருந்த எழுவரில் பழம் பெரும் எழுத்தாளர் அ. செ. முருகானந்தம் அவர்களும் மலையக எழுத்தாளர் சி. வி; வேலுப்பிள்ளை அவர்களும் விழாவுக்கு வராதது பலருக்கும் ஏமாற்றமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது (எமக்கு அப்படியல்ல)

பொதுவாக நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் நடத்திய இத்தமிழ்இலக்கிய விழாவின்முக்கிய நோக்கமே மக்கள் அரசுக்கு முண்டு கொடுப்பதேயாகும். அமைச்சர்களும் பல பேச்சாளர்களும் அடிக்கடி தமது அரசுதான் நல்லைநகர் ஆறுமுக நாவலருக்கும் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமிக்கும் முத்திரை வெளியிட்டதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்கு விலையாகச்செய்வது போல் அவர்களுடைய அரசு நாள்தோறும்மேற்கொண்டு வரும் இன ஒழிப்பு தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகள் எத்தனை? எத்தனை? புள்ளிவிபரம் வேண்டுமா? (தேவாங்குக்கும் காட்டெருமைக்கும் நாகணவாய்க்கும்தான் முத்திரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றனவே!)

## ஒருவரிச் செய்திகள்

● யாழ். மாவட்ட பிரதிநிதி ஒருவர் தனது தொகுதியைச் சேர்ந்த பகுதிகளுக்கு விஜயம் செய்யும் பொழுது பொலிஸ் பாதுகாப்போடு போக வேண்டிய நிலை உருவாகியுள்ளதாம். அண்மையில் கூட பொலிஸ் பாதுகாப்போடு தான் ஒரு இணைப்புக் கூட்டத்திற்கும் சென்றுள்ளாராம்.

● யாழ் மாவட்டத்தை சேர்ந்த ஒரு கூட்டுறவுச் சங்கம், ஒரு தனியார்துறை வியாபார நிலையத்தை பல 'லட்சருபாவுக்கு விலைக்கு வாங்கும் முயற்சியில் 'சில லட்சரூபாச்' சிக்கல்கள்' பற்றி மேலிடம் புலன் விசாரணை செய்கின்றதாம்.

● யாழ் நகரத்திற்குள் மோட்டார் வண்டிகள் வருவதற்கு ஆயக்காசு அறவிடப்படலாமெனத் தெரிகிறது: இந்த ஏற்பாடு அன்பளிப்பு சிட்டு வாங்கியவர்கள், அதற்கிதற்கெனப் பணம் கொடுத்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவல்லாமல் பட்டணத்தின் நன்மைக்காகவல்லவாம்.

● பலது கண்ட சங்கரன் ப(ழை)மையதை விட்டுப் புதியதைப் பிடித்துக் கொண்டார்.

● பூநகரியின் அதிகாரி புல்லைகளுக்கும் பொடியன்களுக்கும் இரவு நேரத்தில் பாடம் சொல்லிக்கொடுக்க விரும்புகிறாராம். ஆனால் பாடம் கேட்க யாரும் வருவதில்லையாம். காரணம்?

● தன்னிடம் உதவி தேடி வருபவர்களையெல்லாம் 'தமிழரசை ஆதரிப்பதில்லையென சத்தியம் செய்யும்படி' பலது கண்ட சங்கரன் வலியுறுத்துகிறாராம்:

● திருநெல்வேலி 'அசிங்கத்திற்கும்' நல்லூர் ஒட்டறை வீரனுக்கும் உறவு முறிந்துவிட்டதாம்.

● உயிருக்குயிராயிருந்த 'தாடி'யை நல்லையூர் ஒட்டறை வீரன் ஒட்ட வழித்து விட்டாராம்; நன்றியென்பதை நல்லூரான் அறியார்.

● ஈழத்துச்சிதம்பரத்தின் பாதுகாவலன் ஈழத்துச் சிதம்பரத் தேவஸ்தான பிரமுகர் என்று தனக்குத்தானே பட்டம் சூட்டி, பெரும் பக்தன் என்று பகட்டு வேடம் போட்டுத்திரிந்த காவடியின் வால்பிடி ஒருவர் அதே தேவஸ்தான வாயிலில் வைத்து அண்மையில் காலடி வாங்கினாராம்; இந்தப் புகழேந்திச் சுப்பரின் வண்டவாளங்களை பொறுக்க முடியாத சுந்தரேசப் பெருமான் நல்ல பாடம் படிப்பித்துள்ளார்என்று ஊரார்கள் கதைத்துக் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் இழித்துப் பழிக்கப்பட்டுசீரழிந்துபோவதிலும்

# உரிமைக்குப் போராடித் தூக்குமேடை ஏறுவதுமேல்!

தை பிறந்தால் வழி பிறக்கும் என்றுரர் ஆன்றோர். தமிழ் மக்கள் வாழ்விலும் தைபிறந்ததும் ஒருவழி காணத் தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு 29, 30ம் திகதிகளில் நடப்பது மிகப் பொருத்தமானதாக இருக்கின்றது.

மண்ணில்இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினை இனி இழக்க நாம் தயாரில்லை என்று தமிழ் மக்கள் துடித்தெழ, அவர் தம் துன்பம் துடைத்து இன்பம் பெருக இம்மாநாடு பல நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும். 'தன்பமுறவரினும் செய்க துணிவாற்றி, இன்பம் பயக்கும் வினை' என்ற வள்ளுவன் வாக்கைத் தமிழரசுத் தலைவர்கள் மனதில் கொண்டு திட்டங்கள் தீட்டவேண்டும்.

"எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டுச் சீரழிந்து காலப்போக்கில் ஒழிந்துபோவதைக் காட்டிலும், நான் தேசத்துரோகி என்று குற்றஞ்சாட்டப்பட்டு, தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படு வதையே என்றும் மகிழ்வோடு வரவேற்கிறேன்."

என்று பாராளுமன்றத்தில் வீரமுழக்கமிட்டார் கோப்பாய் கோமான் அமரர் வன்னியசிங்கம். இவ்வீரமிக்க செம்மனச் செம்மலும், தள்ளாத வயதிலும் தமிழுரிமை பேணி காத்துவரும் தமிழரசுத் தந்தையும், எவருக்கும் அஞ்சாத இரும்பு மனிதனும் மற்றும் சிலரும் சேர்ந்து தமிழ் காங்கிரஸ் தலைவரின் பிரசாரங்கள் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியினால் தமிழ் மக்களிடையே செல்லாக் காசாகிப் போனதை நாடறியும்.

அன்றுதொட்டு இன்று வரை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு என்னத்தை செய்தது? அதன் சாதனைகள் தான் எவை? என்று இன்றும் மாற்றுக் கட்சியினர் மாய்மாலம் கொட்டுகின்றனர். பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக்குடித்தால் பூலோகம் இருண்டு போமா?

த. அ. கட்சியின்
சாதனைகள்!

தேர்தலுக்குத் தேர்தல், தேர்தல் முடிந்ததும் ஓய்ந்து பாயை உட்கார்ந்தால் சாணுத்தி என்று தமிழரசுக் கட்சி என்றும் ஓய்ந்திருந்ததில்லை. கட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம் மாறும் என்று காலம் கடத்தியதில்லை. சிங்கள ஆதிக்கம், சிங்கள மொழித் திணிப்பு. இவற்றிலிருந்து தமிழ் மக்களைக் காத்துவருகிறது. சிங்கள ஆதிக்க வெறியை எதிர்த்துப் பாராளுமன்றத்திற்கு உள்ளும்புறமும், அன்றும், இன்றும் எதிர்ப்புக்குரல் எழுப்பிப் பல கிளர்ச்சிகளைச் செய்து வெற்றியும் கண்டது. 1956ல் தனிச் சிங்களச்சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் அறப்போர் செய்து, கல்லடிபட்டு, சொல்லடி ஏற்று, காடையரின் கைவரிசைகளுக்கு அஞ்சாது தமிழ் மக்கள் திடசித்தத்தை அகில உலகத்திற்கும் அறிவுறுத்தியது.

1956ல் திருமலை யாத்திரையை நடாத்தி இலங் மறந்திருக்கமாட்டார்கள். இதற்குக் காலாக இருந்தது தமிழரசுக் கட்சியின் எதிர்ப்புப் பிரசாரமென்பதை எவரும் மறுத்திட முடியுமோ?

போராட்டம், சத்தியாக்கிரகம், தியாகம் என்பவற்றிற்குச் சொல்லிலும் செயலிலும் விளக்கம் தந்தது இக்கட்சியன்றோ? தமிழ் மக்கள், தமிழ்மொழி, தமிழ் கலை, தமிழ் கலாச்சாரம், தமிழ் பிரதேசம் என்று அன்றும் இன்றும் தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்து வருவதும் தமிழரசுக்கட்சியன்றோ?

பெரும்பான்மை இனமான சிங்கள மக்களின் அரசாங்

## 'புத்தொளி'

கங்கனை இரு தடவைகள் அரியாசனம் ஏற்றியதும் பின்னர் இறக்கியதும் உலக வரலாற்று நிகழ்ச்சியன்றோ? தமிழரசுக்கட்சி எதுவும் சாதிக்கவில்லையா?

தமிழரசுத் தலைவர்களான அமரர்கள் வன்னியசிங்கம், இராசவரோதயம், ஏகாம்பரம், கந்தையா, நாகநாதன் மனித சக்திக்கும் மீறிய உழைப்பைத் தமிழ் மக்களுக்குத் தந்ததனுலேயே இன்னுயிர் ஈந்து அமரர்களானுர்கள்.

வங்க மக்களின்
விடுதலை உணர்ச்சி

கட்சி ஆரம்பித்து 22 ஆண்டுகளாயினும் விடுதலை கிடைக்கவில்லையே என்று வரலாறு தெரியாத மக்கள் எண்ணுவதில் தப்பேது

## கொழும்பில் நடைபெற்ற தனித்தமிழ்த் திருமணம்

தமிழரசுத் தந்தை செல்வா அவர்களின் இளைய புதல்வரும் வழக்குரைஞருமான திரு. சந்திரகாசன் அவர்களுக்கும் இரும்பு மனிதர் டாக்டர். இ. மு. வி. நாகநாதன் அவர்களின் இளைய புதல்வி செல்வி. நிர்மலாவுக்கும் (சட்டக் கல்லூரி விரிவுரையாளர்) கொழும்பில் 20. 1. 72ல் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நாதஸ்வர மேதை அளவெட்டி என். கே. பத்மநாதனின் இன்னிசை முழங்கிட சந்தனமும் குங்குமமும் மற்றுமுள மங்கலப் பொருள்களும் மணம் பரப்ப—நிலைவிளக்கும் ஒளி விளக்கும் ஆரத்தியும் தமிழ் பண்பாட்டை எடுத்து விளக்கிட—தனித்தமிழில் நடைபெற்ற இத்திருமணம் கண்டு தமிழ் உள்ளங்கள் அனைத்தும் குதூகலித்தன. திருமணத்தின் போது பாடப்பட்ட கீதங்களும் கர்நாடக இசைக் கமைய தமிழிலேயே பாடப்பட்டது குறிப்பிடத் தக்கது—

இத்தமிழரசுத் திருமண விழாவில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தலைவர்களும் மற்றும் கட்சிப் பிரமுகர்களும் கட்சி சார்பற்ற பிரமுகர்களும், கலந்து கொண்டு சிறப்பித்து மணமக்களை வாழ்த்தினர்.

சந்திரகாசன்—நிர்மலா தம்பதிகள் நீடு வாழ்க என நாமும் வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர்

பூட்டோ விளங்கினார். பல இலட்சம் மக்கள் கிழக்குப் பாகிஸ்தானில்செத்துமடிந்தனர். ஒரு கோடி மக்கள் இந்தியாவில் அனுதைகளாக வந்தனர். பாகிஸ்தான் இந்தியாமேல் ஆக்கிரமிப்புச் செய்தது. பிரகடனப்படுத்திய யுத்தத்தை ஆரம்பித் இவ்விடுதலைப்போர் நமக்கு எடுத்துக்காட்டுகிறது?

தமிழரசுக்கட்சி வகுக்கும் கொள்கைத் திட்டங்களை ஏற்று ஒவ்வொரு தமிழனும் சொல்லாலும், செயலாலும் தமிழ்மொழி காக்க முன் வர வேண்டும். தமிழ் மக்கள விடுதலை இயக்கமாக விளங்

# கோப்பாய்க் கோமானின் புறநானூற்று வரிகளை நினைந்து விடுதலைப் பாதையிற் செல்ல மாநாடு வழி காணட்டும்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியை 1949ம் ஆண்டு மார்கழித் திங்கள் 18ந் திகதி ஆரம்பித்தார்கள்.

இணைப்பாட்சி

தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழ இணைப்பாட்சியே வழி, இணைப்பாட்சியில் தமிழ்மொழி சிங்களத்துடன் சமமானதாக இருக்கவேண்டும் என்று கடந்த 22 வருட காலமாகச் சங்கநாதம் செய்துவருகின்றது தமிழரசுக்கட்சி. அன்றுதொட்டு இன்றுவரை இதயபூர்வமாகத் தமிழரசுக்கட்சி தமிழ் மக்கள் விடுதலைக்காக உழைத்துவருவதை மாற்றாரும் ஏற்றுக்கொள்வர்.

தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை மக்கள் சரியாக உணராததால் 1952ம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி போட்டியிட்டபோது வடக்கில் அமரர் வன்னியசிங்கமும் கிழக்கில் அமரர் இராசவரோதயமுமே வெற்றியீட்டினர். இத்தேர்தலில் கிடைத்தவாக்குகள் 45,331. தமிழரசுக் கட்சியின் இடைவிடாத பிரசாரத்தினுல் தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை விரும்பி ஏற்ற தமிழ் மக்கள் 1960 ஜூலை தேர்தலில் 16 தமிழரசு உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தனர். இத்தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த வாக்கு விகிதம் 60% என்பதிலிருந்தே இக்கட்சி தமிழர்களிடம் பெற்ற தனிப்பெரும் செல்வாக்கை உணரமுடிகின்றது.

கைச் சரித்திர வரலாற்றிலேயே ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியது. இவ்யாத்திரை மூலம் தமிழ் மக்கள் பிரச்சினையை உலகறியச் செய்தது. 1958ல் சிங்கள ஸ்ரீயை எதிர்த்துத் தலைவர்களும், தொண்டர்களும் சிறைசென்று தமிழுரிமை காத்தது. 1961ல் அகில உலகமும் வியக்கும் வகையில் சத்தியாக்கிரகம் நடாத்தி தமிழ் மக்களை கட்சி பேதமின்றி ஒன்றுபடப் போராட வைத்தது. இதனுல் அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயல்படாது போனது.

தனிச்சிங்கள அமைச்சர்கள் தமிழ் பிரதேசங்களுக்கு வந்த போதெல்லாம் கறுப்புக்கொடி காட்டி, கதவடைப்புச் செய்து எதிர்ப்புத் தெரிவித்தது. இலங்கைத் தமிழினத்தின் வரலாற்றிலேயே முதன் முதலாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களை —முஸ்லிம்கள் உட்பட ஐக்கியப்படுத்தியது. மலையக மக்களின் உரிமைகளுக்காக குரலெழுப்பியது. தீண்டாமை வேண்டாமே என்று அன்றும், இன்றும் தீண்டாமையைப் போக்கப் பாடுபட்டு வருகின்றது.

1963ம் ஆண்டு காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில், தென்னபிரிக்க இனவெறியைக் கண்டித்த எமது பிரதமரை 'உங்கள் நாட்டில் தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என கிண்டல் செய்ய வைத்த சம்பவத்தைத் தமிழ் மக்கள் மில்லை. அல்சீரிய மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க லட்சத்திற் கதிகமான மக்களைப் பலியிடவேண்டியேற்பட்டது. ஒரு தலைமுறையாகப் போரிட முடிந்தது.

நமது கண்முன்னே நேற்று நடந்த நிகழ்ச்சியைச் சற்றுச் சிந்திப்போம். மதத்தால் இஸ்லாமியராக இருந்தும் மொழியால் வேறுபட்ட கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் கடந்த 25 ஆண்டுகளாக விடுதலைபெறத் துடித்தார்கள். மேற்குப் பாகிஸ்தானியரே அடுத்தடுத்துத் தம்மை ஆள்வதையும், பொருளாதார சுபீட்சமுள்ள தம் நாட்டைச் சுரண்டுவதையும் நீறுபூத்த நெருப்பாக இருந்து பார்த்துப் பார்த்துத் துடித்தார்கள். சுமார் ஒரு கோடி மக்கள் இதய தாபம் ஈற்றில் பங்களா தேஷாக மாறியதை நாம் கண்ணாரக் கண்டோம்.

தமது தானைத் தலைவன் முஜிபுர் சிறைபிடிக்கப்பட்டபின் வெறும் கைகளால் துப்பாக்கி தூக்கி யாகியாவின் படைப்பலத்தை முறியடித்தார்கள். மக்கள் வோட்டுப் பெற்று ஆட்சி அமைக்க ஆயத்தமான தலைவர்கள் சிறைபிடிக்கப்பட்டு, மக்கள் வேட்டு மூலம் தீர்த்துக் கட்டப்பட்டனர். யாகியா யுத்த வெறிபிடித்து கிழக்கு பாகிஸ்தான் மக்களைத் தான்தோன்றித் தனமாகக் கொன்று குவித்தார். அவருக்கு ஆதரவாக வேட்டை நாயாக தது. இந்தியப் படைகள் கிழக்குப் பாகிஸ்தான் படைகளுடன் சேர்ந்து போரிட்டன. உலக நாடுகள் பல இந்தியாவுக்கெதிராகக் கொதித்தெழுந்தன. உலக வல்லரசுகளான அமெரிக்காவும் உருசியாவும் முறையே யாகியாவையும், இந்திராவையும் ஆதரித்தன. அமெரிக்கா கையில் பூட்டோ இருந்துகொண்டு இந்தியாவைப் பயமுறுத்தினார். உருசியா கையில் 'வீட்டோ' இருந்துகொண்டு இந்தியாவைக் காப்பாற்றியது.

சுதந்திர வங்கம்

முடிவில் ஆயிரமாண்டாயினும் யுத்தம் நடத்துவோம் என்ற யாகியாவும் பூட்டோவும் யுத்த நிறுத்தத்தில் வந்து மூக்குடைபட்டனர். பங்களா தேஷ் சோதிச் சுடரொளியாய் சுதந்திர உதய சூரியன் உதிக்க உலகப்படத்தில் விடுதலை நாடாக இடம்பிடித்துக் கொண்டது. தியாகமும், இரத்தமும் சிந்தியதால் இன்று சுதந்திர புருஷர்களாக வங்க மக்கள் வீறுநடை போடுகின்றனர். சுதந்திர தங்க வங்கம் தகதகவெனப் பட்டொளிவீசி எம்மை எல்லாம் சுதந்திரதாகமுடையவர்களாக மாற்றியுள்ளது.

நமது அண்டை நாடொன்று அண்மையில் விடுதலை பெற்றதையும் அதற்கு இன்றைய நாடு உதவியதையும் இன்று கண்டோம். அகிலக் குத் தெய்வம் துணை என்பது கும் தமிழரசுக்கட்சியும் சில தீர்க்கமான முடிவுகள் செய்ய வேண்டும். புதிய அரசியல் அமைப்பு தமிழ் மக்களுக்கு ஏற்ற அமைப்பாக இருக்கவில்லை. நியாயமான தமிழ் உபயோகமும் கைவிடப்பட்டுள்ளது, தமிழ் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியும் வரம்பிட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. புனரமைப்பென்ற போர்வையில் சிங்கள குடியேற்றம் சிறுகச்சிறுகத் தமிழ் பிரதேசங்களில் ஏற்படுகின்றது. இவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்தித் தமிழும் இந்நாட்டில் சம உரிமை பெற சிறப்பு மாநாடு நிட்சயமாக வழி காட்ட வேண்டும். இனி ஒரு விதி செய்வோம்; அதை எந்தநாளும் காப்போம்.

த. அ. கட்சிக் கிளை
திறப்புவிழா.

கடந்த 16. 1. 72ல் த. அ. க. கிளை உடுவில் தொகுதி 4ம் வட்டாரத்தில் மாசியம் மன் கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பா. உ. திரு. வி. தர்மலிங்கத்தின் தலைமையில் நிர்வாக சபை தெரிவும் நடைபெற்றது. கிளைத்தலைவராக— இ. தங்கராசாவும், செயலாளராக வை. சின்னத்துரையும், பொருளாளராக ம. இன்னையாவும் இதரநான்கு அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நிற்பவை

## 19. வாழத் தெரியாதவர்கள்

அரசியற் செல்வாக்கு என்ற ஏணியில் ஏறக்கிடைத்த தலைவர்கள் தமது வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெருக்கிக்கொண்டதுதான் வழக்கமான வரலாறு. இதற்கு மாறாக டொக்டர் நாகநாதன் அந்த ஈ. என். 42 என்ற பழைய 'பியட்' காரில்தான் ஓடிக்கொண்டிருந்தார். தந்தை செல்வாவும் தமது பழைய 'வொக்சோல்' வண்டியிற்றான் ஓடிக்கொண்டிருக்கிறார். அவ்வளவு ஏன்? தந்தை செல்வா அண்மைக் காலங்களில் கொழும்பில் அடிக்கடி பஸ் வண்டியில் பயணஞ் செய்யும் காட்சி பலரும் அன்றாடம் காணும் காட்சியே. இதனைக் கண்டு வியப்புற்றோரும் வேதனையுற்றோரும், 'பஸ் வண்டிப் பயணத்தை நிறுத்தச் சொல்லுங்கள்' எனப் பெரியவர் வீட்டிற்குக் கண்டனம் தெரிவித்தோரும் பலர்.

புதுமை:

உண்மைதான்; சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களே பஸ் வண்டிப் பயணம் செய்வது அபூர்வமான காட்சியாகும் இந்நாட்களில், பாரிய அரசியல் இயக்கமொன்றின் தலைவர்—இலங்கையின் தலைசிறந்த வழக்குரைஞராக விளங்கியவர் — கியூ. சி. பட்டம் பெற்றவர் பஸ்வண்டியில் பயணஞ் செய்வது புதுமைதான்; அதிலும் புரட்சிவாத சோசலிஸ்டுகள் எனத் தம்மைப் பிரகடனப்படுத்திக்கொண்டிருக்கும் பெரும் வர்க்கப்போர் வீரரெல்லாம் போலி அந்தஸ்துகளை நிலைநாட்டுவதற்கென அக்கப்போர் நடாத்திக்கொண்டிருக்கும் அரங்கில் முதலாளித்துவக் கட்சியென்று 'முற்போக்குவாதி'களால் சாடப்படும் தமிழரசுக்கட்சியின் தலைவர், தமது தகுதிக்குரிய சாதாரண வசதிகளையும் புறக்கணித்து நடப்பது புதுமைதான்.

இராசோபசாரம்:

அன்றொருநாள் டொக்டரின் 'பியட்' கார் ஜெர்மன் நாட்டுத் தூதரகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. என்னையும் டொக்டர் கூட்டிச் சென்றது கார் தன்னத்தானோ என நான் ஐயமுறுமளவுக்கு கார் தராறு செய்தவாறேயிருந்தது. 'டேய் தம்பி தள்ளடா' என்ற ஆணை அடிக்கடி பிறந்தது. இந்த இலட்சணத்தில் என் கழுத்தில் 'ரை' வேறு. டொக்டருக்கும் சற்றுசங்கடமாகத்தான் இருந்தது தன் வண்டியின் அன்றைய பொல்லாதனத்தை மறைப்பதற்காக அதன் பண்டைய புத்திசாலித்தனத்தையெல்லாம் புகழத் தலைப்பட்டார். தூதரகமும் வந்தாயிற்று. வண்டியை நிறுதி விட்டு உள்ளே சென்று இராசோபசாரத்தைத் துய்த்துக் கொள்கிறோம்.

தர்மசங்கடம்:

வந்த விடயத்தை முடித்துக்கொண்டு இராஜ கம்பீரத்துடன் வெளியே வரவே மரியாதைக்காக தூதரக முதல்வரும் எம்மை வழியனுப்ப மாடிப்படியிறங்கிக் கீழே வருகிறார். தம் வண்டியின் கோளாறை அவர்களும் தெரிந்துகொள்ளக் கூடாதே என்ற ஆர்வத்தில் அவரை 'கேட்' வாயிலில் வைத்து நிறுத்திவிட விழைந்த டொக்டர், கையசைத்து 'தாங் யூ, குட்பை! சேரியோ!' இன்னோரன்னவெல்லாம் கூறி கேட்டுக்கு உள்ளே வைத்தே வழியனுப்ப முயல்கிறார்; முடியவில்லை. அவர்களோ மிதமிஞ்சிய மரியாதையை ஓம்புதற்காக 'கேட்'டைத் திறந்து கார் வரைக்கும் வந்துவிட்டனர்; அவர்கள் உள்ளே சென்றாலன்றி கார் புறப்பட முடியாது. கார் புறப்பட்டாலன்றி அவர்களும் செல்லமாட்டார்கள்; தள்ளினாலன்றி காரும் புறப்படமாட்டாது. இந்தத் தர்மசங்கடமான நிலையில் டொக்டரின் முகத்தில் அசடு வழிந்தது.

அர்ச்சனை:

'குட்பை! சேரியோ!' இவற்றை மீண்டும் அர்ச்சித்தார். அவர்களும் பதிலுக்கு அர்ச்சித்தனரேயன்றி நகரவேயில்லை. நப்பாசையில் என்னையும் அழைத்தவாறே சென்று வண்டியிலேறி கதவை அடித்துச் சார்த்துவதாகப் பாசாங்கு செய்கிறார். 'இப்போ தள்ளாதே' என்ற வார்த்தைகளை என் காதில் திருட்டுத்தனமாகப் பாய்ச்சுகிறார். அவர் கண்சாடை காட்டவே, நானும் ஒப்புக்கு முன்னிருக்கையில் அமர்ந்து கதவைச் சாத்துகிறேன். 'குட்பை! சேரியோ!'—டொக்டரின் அர்ச்சனைகள் மீண்டும் கேட்கின்றன; அப்பாடா! தூதரக முதல்வர் கையசைத்துக் கொண்டே உள்ளே செல்கிறார். அவர் கேட்டைத் தாண்டியதும் டொக்டரின் ஆணை பிறக்கிறது; 'டேய் தம்பி, இறங்கித் தள்ளு. விரைவாக... விரைவாக' (Come on... quick quick) துரித கதியில் இயங்குகிறேன் நான். வண்டி புகையைக் கக்கிக்கொண்டே புறப்படுகிறது. இந்தப் போலி நாடகத்தை நினைத்தவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து அர்த்த புஷ்டியுடன் சிரித்துக்கொள்கிறோம்.

★

ஒட்டாண்டிகள்:

டொக்டரின் சொந்த வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளை எழுதவா வேண்டாமா என்றொரு கணம் தயங்குகிறேன். டொக்டருக்குஇழுக்குண்டாக்குவேனோ என்றொரு மயக்கம். இத்தொடர்பில் அண்ணன் அமிர்தலிங்கம் பற்றிய நிகழ்ச்சியொன்றும் நினைவு விளிம்பிற்கு மேலே எட்டிப் பார்க்கிறது. இவை பற்றி முறையே அரியாலையிலும் காரைநகரிலும் நடைபெற்ற பகிரங்கக் கூட்டங்களில் சிலாகித்துப் பேசியிருக்கிறேன். இதைக் கூறுவதால் இவர்களுக்கு எவ்வித அவமானமும் நேர்ந்துவிடாது. இந்நாட்டின் உடன்கால வரலாற்றிலேயே தமிழரசுக் கட்சிக்காரனைத்தவிர நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுபெற்ற வேறு எவன் தனது சொந்த வசதி வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்ளத் தவறினான்? ஓட்டாண்டிகளாக நாடாளுமன்றத்திற்குத்தேர்வுபெற்றவர்கள் அடுத்த தேர்தலுக்குள் செல்வச் செருக்குமிக்க சாம்ராஜ்யத்திற்கு அதிபதிகளான சங்கதிகளைத்தானே இந்நாட்டின் சரித்திரம் சந்தித்திருக்கிறது? இதற்கு நேர்மாறாக, நாடாளுமன்ற உறுப்பினனான பின் தமிழரசுக் கட்சிக்காரன் ஓட்டாண்டியானானென்றால், அது பெரிய அவமானமாகுமா?

சஞ்சலம்

1964ஆம் ஆண்டு டிசம்பர் மாதமென நினைவு; ஆள்பலமும், அணி பலமும் அதிகார பலமுமிக்க அரசாங்கத்தைத் தமது வாக்குபலத்தால் வீழ்த்திவிட்டு, புதிய பொதுத்தேர்தலில் போட்டியிடுதற்காகத் தமது தொகுதிக்குத் திரும்புகின்றனர் தமிழரசுத் தலைவர்கள். அரசாங்கத்திற்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தது தமிழரசுக் கட்சி. அந்நாட்களில் இரவொன்று கடப்பதற்குள்ளாகவே வேறு கட்சிகளைச் சேர்ந்த கணிசமான அளவு உறுப்பினர்கள் குபேர சம்பத்துக்கு அதிபதியாயிருந்தனர்; எப்படியோ ஆகியிருந்தனர். அவ்வளவுதான்; தமது தொகுதிக்குத் திரும்பவும் டொக்டரை வழியனுப்பிவைக்க தொடர் வண்டி (Train) நிலையம் சென்றிருந்தேன். தேர்தற்செலவினைச் சமாளிப்பது பற்றி டொக்டர் சிறிது சஞ்சலமுற்றிருந்தார்;

சுவீப் டிக்கெட்

இந்நேரம் வண்டி புறப்படவிசில் ஊதப்பட்டது; டொக்டர் எட்டி என் காதோடு காதாக அவசர அவசரமாகக் கூறியவொரு விடயத்தை அடுத்தவாரமே நான் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தியமை

—கரிகாலன்—

அழகாகுமோ என்னவோ. இரண்டு சுவீப் டிக்கெட்டுகள் வாங்கித் தமது கோட்டுப் பைக்குள் வைத்திருப்பதாகவும் அம்மாவிடம் (அவர் மனைவி யாரிடம்) சொல்லி அவற்றை மறுநாள் செய்தித்தாளில் சரிபார்க்கும்படியும் கூறினார். உண்மையாகவே என்மனம் மிகவும் நொந்துவிட்டது. டொக்டர் மட்டுமல்ல, தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ஒவ்வொருவருமே, அன்றைய நிலைபரத்தின்படி, ஓரிரவிலேயே ஒரு சுவீப் முதற் பரிசாகக் கிடைக்கக்கூடிய தொகையைப் பெற்றிருக்கமுடியும் என்ற பின்புலத்தில் (Background) வைத்து எண்ணிய போது, டொக்டர் என்னிடம் விடுத்த வேண்டுகோள் விவரிக்கமுடியாத மனப் போராட்டத்திற்குத் தளமாயிற்று;

அவமானமா?

ஒருவார காலத்தில் அரியாலையில் நடைபெற்ற மாபெரும் [illegible] காரைநகர் [illegible] ரின் முதலாளித்துவம்' பற்றி மூசாரிபாடிய இடதுசாரியினருக்கு (இடதுசாரியோர்!) விடையிறுக்க விரும்பிய நான், தமிழரசுக் கட்சிக்காரனின் வீட்டிலே குமுறுகின்ற வறுமை நிலையைக் காட்ட விரும்பி மேற்படி நிகழ்ச்சியைப் பகிரங்கமாகவே தெரிவித்தேன். டொக்டர் மேடையிலிருந்து முறுவலிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தார்; அங்ஙனம் கூறியமைக்காக மறுநாள் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். "அதனாலென்ன? வறுமை அவமானகரமானதல்ல" (Poverty is no disgrace) என்றார்.

அபாண்டம்:

அரியாலைக் கூட்டத்தை முடித்துக்கொண்டு அதே உணர்ச்சி வயத்தவனாய் அன்று காரைநகரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசச் சென்ற நான், ஆங்கு பேசிய அண்ணனின் பாரியார் திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அம்மையார் குறிப்பிட்டவொரு விடயத்தைக் கேட்டுச் சற்றே நைந்து விட்டேன். அன்னார் ஆயிரக்கணக்கானோர் முன்கூறியதை நான் இங்கு மீட்டுரைப்பது முறையற்றதாகாது. அத்தேர்தலில் அண்ணன் அமிர்தலிங்கத்துடன் காரைநகரிப் பிரமுகர் ஒருவரும் போட்டியிட்டார். மும்முனைப் போட்டியில் தமது வெற்றிவாய்ப்பைப் பெருக்கவெண்ணியோ — அல்லது தோல்வி வாய்ப்பைக் குறைக்கக் கருதியோ — குறிப்பிட்ட வேட்பாளர், திக்குவாயர் சிலர் சாற்றிச் சாற்றித் தேய்ந்துபோனவொரு அபாண்டத்தை அண்ணன் குடும்பத்தினர் மீது கூறியிருந்தார்; அதாவது, சத்தியாக்கிரகத்திற்குத் திரட்டிய பணத்தைக் கொண்டு அவர்கள் வீடு வாசல் கட்டி கோலாகலமாகக் குடியிருப்பதாகக் கூறியிருந்தாராம் — பகிரங்கக் கூட்டத்தில்.

பதிலடி:

அக் குற்றச்சாட்டுக்கு அம்மையார் அன்று அங்கு கொடுத்த பதில் இருக்கிறதே அது காத்திரமானது; ஆணித்தரமானது குறிப்பிட்ட எதிர் வேட்பாளரின் வாய்ப்புக்களையும் நிர்மூலமாக்கக்கூடியது. அதைக் கூறுவதை அவர் தவிர்த்திருக்கமுடியாது என்பதுடன், இயற்கையாக எழுகின்ற தயக்கத்தையும் விலக்கிக்கொண்டு அவர் அதைக் கூறியது புத்திசாலித்தனமானதே. அம்மையார் பின்வருமாறு கூறினார்: "திரு...... (அவர் பெயர் குறிப்பிட்டு) இங்ஙனம் அபாண்டமான குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார். எமது பொருளாதார நிலை — பணக்கஷ்டம் அவருக்கே தெரியும். எங்கள் வீட்டு நகைகள் — எனது நகைகள் உட்பட — அவரிடத்தில்தான் அடகு வைக்கப்பட்டிருக்கின்றன. எமது வீட்டு நிலையை அறிந்துகொண்டும் அவர் இப்படி போலிக் குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது" என்று கூறினார். கூட்டத்திலிருந்த பொதுமக்களின் முகங்களை நோட்டம் விட்டேன். அவர்கள் உள்ளம் பனித்திருந்தது என்பதை முகம் கூறிற்று.

உரிமையும் உடைமையும்:

என் மனம் எரிந்துகொண்டிருந்தது. வட்டிக் கடைச் செட்டியார் தேர்தலில் போட்டியிட வந்ததையும் பொறுத்துக்கொள்ளலாம்; அண்ணன் வீட்டு நகையனைத்தும் தன் வீட்டில் அடமானத்திலிருக்க, அண்ணனின் செல்வச்செருக்கைப் பற்றி நாக்கூசாது கூறிய நெஞ்சழுத்தம் இருக்கிறதே, அது விலங்கு வூர்க்கதிற்கு இருக்கலாம்! மானிடவர்க்கத்திற்கு இருக்கலாமோ. அம்மையாரைத் தொடர்ந்து பேசிய நான் என் உணர்வுகளுக்கு உருவேற்றினேன். தமிழினத்தின் உரிமைகளைக் காக்கும் போரிலே தமது சொந்த உடைமைகளை இழந்தவர் அமிர்தலிங்கம் — தமிழினத்தின் உரிமைகளை அடகு வைக்க மறுத்ததினால் தமது உடைமைகளை அடகு வைத்தவர்; மாற்றுக் கட்சியினரோ தமிழினத்தின் உரிமைகளை அடகுவைத்துத் தமது உடைமைகளைப் பேணிக்கொண்டவர்கள் — பெருக்கிக் கொண்டவர்கள்" என்று கூறினேன்.

(20ஆம் கட்டுரையுடன் முடிவுறும்.)

---

### பருத்தித் துறையில் தமிழரசு விறுநடை

பருத்தித்துறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியை வீறுநடை போடச் செய்வதென 31/12/71 அன்று பருத்தித்துறை தமிழரசு மத்திய கிளை, தலைவர் ம. வேலும் மயிலும் அவர்களது இல்லத்தில் கூடியபோது தீர்மானித்துள்ளது.

மேற்படி கிளைக் கூட்டம் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் பங்கு பற்றினார்கள். தலைவர் பேசும் போது கட்சியின் எதிர் வரும் மகாநாட்டுக்கு முன்னர் பருத்தித்துறைத் தொகுதியில் வட்டாரந் தோறும் கிளைகளைப் புனரமைப்புச் செய்து, தேர்தல் கால நடாத்திப் பொதுக் கூட்டத்தை நடாத்த வேண்டும் என்றார்; பருத்தித்துறைத் தொகுதியில் தமிழரசு இயக்கம் மிகவும் வேகமாக இயங்குவதற்காக ஓர் ஆக்கக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது.

ஆக்கக்குழுவின் தலைவராக திரு. சே. கிருஷ்ணலிங்கமும், உறுப்பினர்களாக திரு. வே. திருஞானசம்பந்தர், திரு. ச. வேலுப்பிள்ளை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இதன் ஆலோசகர்களாக பா. உவும், வழக்கறிஞர் ம. வேலும் மயிலும், திரு. மு. பொ. வீரவாகுவும் கடமையாற்றுவார்கள்; வாலிபர்களின் கேள்விகளுக்கு க. துரைரத்தினம் பதிலளித்தார். கூட்டத்தில் மு. பொ. வீரவாகு, நகரசபை உறுப்பினர் வ. கமலநாதன், ம. கணபதிப்பிள்ளை ஆகியோரும் சொற் பொழிவாற்றினார்கள்.

—=

### புங்குடுதீவு தமிழ் அரசு கிளைகள்.

4ஆம் வட்டாரக்கிளை அலுவலாளர்கள்

தலைவர்: திரு. க. ஏகாம்பரம். செயலாளர்: திரு. ஏ. பசுபதி. தனாதிகாரி: திரு. இ. சின்னத்தம்பி.

5ஆம் வட்டாரக்கிளை அலுவலாளர்கள்

தலைவர்: திரு. நா. ஆ. நமசிவாயம், செயலாளர்: திரு. அ. செல்வரத்தினம். தனாதிகாரி: திரு. வ. நல்லதம்பி.

——

### கட்டுடை தமிழரசு வாலிப முன்னணி

அலுவலாளர்கள்

தலைவர்: தி. ச. சற்குணநாதன், உபதலைவர்: இரா. குமாரகுலசிங்கம், இணைச் செயலாளர்கள்: ஆ. மகேந்திரலிங்கம். ந. இராமகுமார். பொருளாளர்: நா. இராசரத்தினம் உபபொருளாளர்: வை. விக்கினேஸ்வரன்.

மேற்படி வாலிப முன்னணியின் அங்கத்தவர்களின் மொத்தத் தொகை 25 ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் துறைமுகத் தொழிலாளி வீட்டில் பாடுவது வானொலி!

# மலைநாட்டுத் தொழிலாளி வீட்டில் கேட்பதோ அழுகை ஒலி!

## என்ன சோசலிசம் ஐயா இது?

கொட்டகலை மலையக இளைஞர் பேரவையினர் 16—1—72 அன்று எடுத்த தமிழ் விழாவில் கலந்துகொண்டு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் ஆற்றிய துடிப்பான தமிழ் உரையைக் கீழேதருகிறோம். மலையகத் தமிழ்த்தொழிலாளர் துன்புறுவது அவர்கள் தமிழராய் இருப்பதால்தான் என்பதை விளக்கும் சூடான சொற்பொழிவு இது.



நண்பர்களே! எனக்கு முன்பு தோழர் பலர் நவீன 'சோசலிசம்' பேசினார்கள். மலையகத்தின் தேயிலைத் தோட்டங்களில் பதினைந்து லட்சம் தொழிலாளர் பகலிரவு மணிக்குக் கண்விழித்து - பனி நனைந்து - வெயில் எரிந்து - அட்டைக் கடிக்குப் பச்சை இரத்தம் பிழிந்து தேயிலைக் கொழுந்தெடுக்கும் துன்பகாவியம் நாம் அறிவோம்; இந்தத் தொழிலாளரின் ஒவ்வொரு மூச்சிலும் ''நாம் ஏனையோரைப் போல் நல்வாழ்வு காண மாட்டோமா? மாட்டுத் தொழுவம்போல் அமைந்த நமது ஒட்டை லயங்கள் மாறும்நாள் வராதா? நாலு மனிதர்போல் நமது குழந்தைகளும் நல்ல பள்ளியில் படித்து வல்ல அறிஞர்களாய் வாழமாட்டார்களா?'' என்ற ஏக்கம் கலந்திருப்பதை நாம் நன்கறிவோம்; ஆனால் இந்த மலைநாட்டுத் தொழிலாளர் ஈழத்தில்ஒதுக்கப்படுவது என்ன காரணத்தினால் என்பதைத்தான் நான் இங்கு விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''மலைநாட்டுத் தொழிலாளியை 'இனவாதம்' பேசிக் குழப்ப வராதீர்கள்'' என்று எனக்கு முன்பு பேசிய ஒரு தோழர் குறிப்பிட்டார். இந்தத் தோழரிடம் நான் ஒன்று கேட்பேன்—தோழரே தோழரே! ஈழத்தில் சோசலிச அரசு நிகழ்வதாகச் சொல்லிக் கொள்கிறீர்களே...உங்கள் சோசலிச அரசின்கீழ் ஈழத்துத் தடுப்பு முகாம்களில் அடையுண்டு விலங்கினும் கீழாய் இன்னலுறும் தொழிலாளிகள் யார்? அந்தத் தொழிலாளியிடையே ஒரு சிங்களவனையாவது நீங்கள் காட்டமுடியுமா? கடலைக் கண்டறியாத—இந்நாட்டில் பிறந்த மலையகத் தமிழ்த் தொழிலாளரையெல்லாம் 'கள்ளத்தோணிகள்' என அடைத்து வைத்து—அடித்து வதைக்கிறீர்களே — இது என்ன சோசலிசம்? இலங்கைத் தடுப்பு முகாம்களில் ஈழத்தின் முதலாளிமார் அனைவரையும் அடைத்துவைத்து —வெளியே தொழிலாளரெல்லாம் வீதிகளில் சுதந்திர 'வீரர்களாய் உலாவந்தால் அது சோசலிசம்—ஆனால் நடப்பது என்ன? குன்றநாட்டுத் தமிழ்த்தொழிலாளி தடுப்பு முகாமிலே! குணசேன கம்பனி சிங்கள முதலாளி அடுக்கு 'மாடி' வீடேலே! இதுதானா ஐயா சோசலிசம்?

மலைநாட்டுத் தொழிலாளியை கள்ளத்தோணி என்கிறீர்கள் உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள் என்றும் சொல்கிறீர்கள். உங்களுடைய பேச்சின் பொருள் எனக்குப் புரியவில்லை. சமீபத்தில் இலங்கையில் இந்திய விஸ்தரிப்பு'IndianExpansion' பற்றி மிகத் தீவிரமான கம்யூனிஸ்டுகள் சிலர் பேசினார்கள் இந்த நாட்டில் சாதாரண சோசலிஸ்டுகள் —சிறிலங்கா கட்சி பேரன்றோர் — மலையகத் தொழிலாளியை கள்ளத்தோணி என்கின்றனர். மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்டுகள், தடுப்பு முகாம்களில் மலையகத் தமிழரில் சிலரை அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தும் சிங்கள வெறி அரசினருக்கு ஒத்துழைப்புத் தந்து அவர்களோடு சங்கமமாகி மகிழ்கின்றனர். அவர்களைவிடத் தீவிரமான கம்யூனிஸ்டுகள் எனப்படுவோர் சிலர் எல்லோரையும் விட ஒருபடி மேலே போய் Indian Expansion' என்று எடுத்துக் கூறுகின்றனர்; ஏனையா? இங்கே பல்கிப்பெருகும் இந்தியர்கள் யார்? அத்தனை பேரும் தொழிலாளர்கள் அல்லவா? விரல்விட்டு எண்ணக்கூடிய செட்டித்தெரு வியாபாரிகளை விடுங்கள் — பதினைந்து இலட்சம் மலைநாட்டு இந்திய வம்சாவழியினரும் யார்? தொழிலாளர்கள் அல்லவா? 'தொழிலாளர்கள் ஈழத்தில் பெருகி விட்டார்கள்' என்று பெருமைப் படுவதை விட்டு ஏன் ''Indian Expansion என்று வயிற்றிலடித்துக் கொள்கிறீர்கள்? Workers Expansion என்று சொன்னால் என்ன?

இந்நாட்டில் உள்ள முதலாளித்துவ சக்திகளால் மட்டுமல்ல இந்நாட்டிலுள்ள எல்லாவகையான சோசலிச சக்திகளாலும் மலைநாட்டுத் தமிழ் மக்கள், 'தமிழர்' என்றுதான் நோக்கப்படுகிறார்களே தவிர — 'தொழிலாளி' என்று பார்க்கப்படுவதில்லை;

கொழும்புத் துறைமுகத்தில் பெரும்பாலானோர் சிங்களத் தொழிலாளிகளே. அங்கே வேலை செய்யும் ஒரு தொழிலாளியின் வீட்டுக்குப் போய்ப்பாருங்கள் — அவனுடைய வீட்டில் அழகான வானொலி பாடிக்கொண்டிருக்கும் ஆனால் மலைநாட்டுத் தேயிலைத் தோட்டத்தில் உள்ள தமிழ்த் தொழிலாளி வாழும் லயத்தில் வானொலியா பாடுகிறது — அங்கே அன்றாடம் அழுகை ஒலி அல்லவா கேட்கிறது. இந்நாட்டில் நிலவுவது உண்மையான 'சோசலிசம்' அல்ல 'ஒரவஞ்சனையான சோசலிசம்' என்பதுதான இதற்கான அடிப்படைக் காரணமாகும்;

மலையகத் தமிழ் நண்பர்களே! ஈழவள நாட்டில்— எத்தனை ஆண்டுகளாய் நீங்கள் இந்த மலைக்குன்றுகளில் இயந்திரமாய் உழைக்கிறீர்கள்? இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத் தேருக்கு தாலாய் இருந்து இந்நாட்டைஇழுத்துச் செல்கின்றீர்கள். ஒருவரா? இருவரா? பதினைந்து இலட்சம் பேர்! உங்கள் மலைநாட்டில் உள்ள தமிழ்த் தொழிலாளருக்கு குடி உரிமை இல்லை—ஆனால் சீனாவிலிருந்து கொழும்புக்கு வந்து இலட்சக்கணக்கான பணத்தில் ஒட்டல் நடத்தும் சீனக்கார முதலாளிக்கு குடி உரிமை உண்டு! இது என்ன சோசலிசம் என்று எண்ணிப் பாருங்கள்!

இலங்கையில் அதிகமான முதலாளிகள் வாழும் இடம் கொழும்பு. அதிகமான தொழிலாளிகள் வாழும் இடம் மலைநாடு. கொழும்பில் எத்தனை பள்ளிக் கூடங்கள்? மலைநாட்டில் எத்தனை பள்ளிக் கூடங்கள்? கொழும்பில் எத்தனை மருத்துவ மனைகள்? மலைநாட்டில் எத்தனை மருத்துவ மனைகள்? இதை ஆழமாய் எண்ணிப்பாருங்கள்! ஏன் இலங்கையின் பெரும்பான்மைத்தொழிலாளரான தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வாழும் மலைநாட்டில் இத்தனை புறக்கணிப்பு? அவர்கள் தமிழர்கள் என்பதுதான் காரணம் —வேறொன்றும் இல்லை.

எங்களை 'இனவாதம் பேசுகிறவர்கள்' என்று இங்கே (10-ம் பக்கம் பார்க்க)

**மலையகத்திலே.........**

# குடியுரிமை, மொழியுரிமைக்குப் போராட மலையகத் தமிழர் தயாராக வேண்டும்!

## கொட்டகலையில் சக்தீ பாலையா முழக்கம்!

16-1-72ல் கொட்டகலையில் நடந்த முத்தமிழ் விழாவில் மண்ணுஞ் சொல்லாதோ எம் மாண்பு' என்ற தலைப்பில் கவியரங்கு நடந்தது. இவ்விழா 'மலையக இளைஞர் பேரவை' யால் எடுக்கப்பட்டது.

கவியரங்கத்திற்குக் கவிஞர் சக்தி அ. பாலையா தலைமை தாங்கினார். அவர் தமது கவிதைகளிலே தலைமையுரைகளையும், அறிமுகத்தையும் செய்ததுடன், கவியரங்கத்தில் பங்குபற்றிய கம்யூனிசத் தோழர்களிற் சிலர் தலைமையை அவமதிக்கும் வகையில் பாடிய கருத்துக்களுக்கும் கவிதையினால் சுடச் சுடப் பதில் கொடுத்து அவர்களின் போலி வேடத்தை அம்பலப்படுத்தியதும் சிறப்பான வகையில் அமைந்திருந்தது.

கவிஞர் தமது கவிதையில் வற்புறுத்திக்கூறிய கருத்துக்களிற் சில:— தமிழ்க் கம்யூனிஸ்டுகளே உங்களுக்கேன் இம்மயக்கம்?

தமிழினத்தை ஏமாற்றும் தந்திரங்களை இலங்கை அரசு தொடங்கி நடாத்தி வருகிறது. இந்தத் தந்திரங்களுக்குத் கருவியாகவும், கையாளாகவும் தமிழ்ப் பொதுவுடைமைக்கட்சித் தோழர்களை அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது. இந்த உண்மையை எமது தமிழ்க் கம்யூனிசத் தோழர்களும், கம்யூனிச எழுத்தாளர்களும் புரிந்து கொள்ளாமல் சந்தர்ப்பச் சலுகைகளில் தமது இனச்சிறப்பினையும், தமிழின உரிமைகளையும் மறந்த மயக்கத்தில் தமிழினத்தின் உரிமைகளுக்குத் தாமே குந்தகம் விளைவிப்பதையும் சிந்திக்கும் ஆற்றலையும் இழந்துள்ளனர்.

தமிழ் மொழிக்கு அரசியல் அமைப்புச் சாசனத்தில் ஆட்சி உரிமைச் சமத்துவம் கிடையாது. தமிழ் மக்களுக்குச் சமத்துவ சுதந்திரம் கிடையாது. மலையகத்துத் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு அரசியலமைப்புச் சட்டங்களில் எந்தவிதமான ஆதரவும், பாதுகாப்பும் கூறப்பட்டிருக்கவில்லை. தமிழ் மொழி தமிழ்க் கலாச்சார வளர்ச்சி, தமிழ்த் தொழிலாளருக்குரிய சமத்துவ பிரஜா உரிமைகள், பொருளாதார உரிமைகள் பற்றிய எவ்விதமான பாதுகாப்பு உறுதியும் அரசியல் புதிய அமைப்பினில் இடம் பெறவில்லை.

தமிழரின் அடிப்படை உரிமைகளை மறுத்திடும் அமைப்புச் சட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளத் துடிக்கும் அரசு தமிழ் மக்களை ஏமாற்றுவதில் இப்போது பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாள்வதும், இதனைத் தெரிந்து கொள்ள முடியாத கம்யூனிஸ்டு எழுத்தாளர்கள் தமிழினத்துத் துரோகிகளாக [illegible] தாமே 'அரசின் [illegible]குள் தள்ளிச்செல்கின்றனர் என்பதையும் தமிழினத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை இலங்கை அரசு புறக்கணிப்பதையும் எடுத்திசைத்தார்.



சம உரிமை எனும் போலிச் சமதர்மம் பேசி வரும் இலங்கை அரசு, தமிழ் மொழிக்கு சம ஆட்சி தருவதைச் சிதறடிக்கும் அரசியலமைப்பை ஆக்கிவைத்து விட்டுத் தமிழ் மொழிக்கு கலை விழா எடுப்பதும், தமிழ் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் விழாக்கள் எடுத்து மதிப்பதாகச் செய்யும் காரியங்கள் யாவும் வெறும் கண்துடைப்பும், ஏமாற்றும் கைங்கரியமுமாகும். எனவே தமிழ்ப் பேசுவோர் தளராத மன உறுதியுடன் தமிழப் பண்பைக் கட்டிக் காப்பதும், தமிழுக்குச் சம உரிமை பெறப் போராடுவதும், தமிழர்களின் பிரஜா உரிமை, மண்ணுரிமைகளுக்கும் சம உரிமைச் சுதந்திரம் பெறுவதற்கு நேர்மையான நடவடிக்கை எடுப்பதும் தமிழ் மக்களின் கடமையாகும் எனவும் அதுவே இனத்தின் மாண்பினை உயர்த்துவதுடன் வெற்றிக்கு வழியமைக்கும் எனவும் இசைத்தார்.

தமிழ்ச் சமுதாயத்தை ஏமாற்றிடத் தங்களின் சோசலிசக் குரலைப் பெருக்கி கம்யூனிசத் தோழர்களை கையாட்களாகக் கொண்டு முதலாளி—தொழிலாளி வர்க்க பேதங்களுக்கு உயிர் கொடுத்துத் தமிழ் மக்களின் சம ஆட்சி உரிமை இலட்சியங்களை முறியடிக்கும் சூழ்ச்சிகளைக் கவிஞர் வன்மையாகக் கண்டித்தார்.

மலையகத் தமிழர்களுக்குச் சமஆட்சிஉரிமை, குடியுரிமை, தமிழ்மொழியுரிமை தருவதற்குமறுத்திடும் எந்த அரசு என்றாலும் அந்த அரசு மின்னலைப்போல மறைந்திடும் எனும் கவிவாக்கினையும் கவிஞர் சொல்லிடத் தவறிடவில்லை. தமிழினத்தில் வர்க்கபேதத்தை உருவாக்கிடாமல், இன ஒருமைப்பாட்டினை உருவாக்கிட வேண்டும் எனவும் அவர் வற்புறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நிர்ணயசபையில் நாம் விடுத்த கோரிக்கைகள்!

# நீதிஅறிந்தோரே, நீவிர்கூறுவீர்! நியாயமற்றதா இவை?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரவும் நம் இயக்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்! சமஷ்டியரசமைப்பின்கீழ் பூரண சுயாட்சியுரிமைகள்கொண்ட தமிழரசு ஒன்றை நிறுவுவதும், இலங்கை முழுவதும் தமிழையும் சிங்களத்துடன் சரிசம அந்தஸ்துள்ள அரசமொழியாக்குவதும் நமது இலட்சியங்கள் என்றாலும், நாட்டின் அமைதி கருதி இடைக்கால ஏற்பாடாக அதை அன்று ஏற்றுக்கொண்டோம்—

அதன்பின்னர், அதேயடிப்படையில்தான் 1960ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் நமக்கும் உடன்படிக்கையேற்பட்டது; 1965ல் டட்லி - செல்வா, ஒப்பந்தம் எழுதப்பட்டது.

தமது வாக்குறுதிகளையும், எழுதும் உடன்படிக்கைகளையும் காப்பாற்றவேண்டும்என்கின்ற அரசியல் அந்தரங்கசுத்தி, சிங்களத் தலைவர்களிடம் கிஞ்சிற்றும் இல்லாத காரணத்தால், தமிழ் மக்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டன; கிழித்து வீசப்பட்டன; இதனால், சிங்களத் தலைவர்களின் உறுதிமொழிகளையும் ஒப்பந்தங்களையும் நம்ப மறுக்கும் நிலைமை தோன்றியுள்ளது. ஆம் நண்பா, ஏமாற்றம், ஈழத் தமிழனின் உள்ளத்தை இன்று எரிமலையாக்கியிருக்கிறது —அந்த எரிமலை வெடித்திடும் நாள் இந்நாட்டின் ஒருமைப்பாடு சிதறிடும் நாளாக அமைந்திடுமோவென அஞ்சுகிறேன்.

சிங்களச் சோதனையில் சித்தியடையாத தமிழர்களுக்கு வேலைகளில் இருந்து சீட்டுக் கிழிக்கப்பட்டு வருகிறது! சிங்களம், தமிழனின் தொழிலைப் பறித்து அவன் வயிற்றிலடிக்கிறது; தமிழர்கள்மீது தனிச்சிங்களம் திணிக்கப்பட்டு வருகிறது! தமிழ்மொழிக்குள் சிங்களமொழி ஊடுருவுகிறது! தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடைவிதித்து, தமிழ் இளைஞர்களை அறியாமை எனும் இருட்டில் தள்ளும் சூழ்ச்சி நடக்கிறது. தமிழ் இனத்தின் தனித்துவத்தை அழித்துச் சிதைத்து, தமிழினத்தின் கலாசார பாரம்பரியத்தை இல்லாதொழித்துவிடும் 'இனக்கொலை' முயற்சிகள் ஏராளமாக நடைபெற்றுவருகின்றன! தமிழினம்என்னவிலைகொடுத்தேனும் தனது விடுதலையை நிலைநாட்டாமல் மானத்துடன், மனிதர்களாக இந்நாட்டில் வாழமுடியாதென்ற நிலை பிறந்துவிட்டது இன்று!

ஆம் நண்பா, வரவிருக்கும் புதிய அரசியல் சட்டம் — தமிழினத்தின் சவப்

## தமிழர் எமக்குத் தனியாட்சி அமைப்போம்

## அழிவதில் இப்பணிக்கு அழிவதே பெருமை!

பெட்டி மீது வைக்கப்படும் கடைசி ஆணியாக — தமிழ் மக்களின் அழிவுக்கு வழி வகுக்கும் திட்டமாக அமைந்துவிட்டிருக்கிறது!

ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து கடைசித்தொடர்பையும் துண்டிப்போம்; சோல்பரி அரசியல்திட்டத்தை மாற்றியமைத்திடுவோம்; அரசியல் நிர்ணய சபையில் நாம் கூடி, இந்நாட்டுக்கேற்ற புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கிடுவோம்; நமக்குள் இருக்கும் பிரச்சினைகளையெல்லாம் பேசித்தீர்த்திடுவோம்; என்று இன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா நமது தமிழரசுக்கட்சியை நோக்கி அழைப்புவிட்ட நேரத்தில் இது பாசக்கரமுமல்ல, நேசக்கரமுமல்ல; மோசக்கரம், இதை நிராகரித்திடுவோம்—என்று நம் இயக்கத்திலுள்ள தீவிரவாதிகள் கருத்துத்தெரிவித்த போதிலும் — இயக்கத்தின் முதிர்ச்சிபெற்ற தலைவர்கள், தமிழினத்தின் நல்லெண்ணத்தையும், சௌஜன்யமாகக் கூடி வாழுதலில் நமக்குள்ள ஆர்வத்தையும் காட்டும் வகையில் அரசியல் நிர்ணய சபைக்கு செல்வோம்; நமது உரிமைக்கோரிக்கைகளை எடுத்துவைப்போம்; அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்திடின் சபையை பகிஷ்கரித்து வெளியேறுவோம்; என்று எடுத்துரைத்த கருத்தினை ஏற்றுக்கொண்டு அரசியல் நிர்ணய சபைக்கு தம் இயக்கத்தினர் சென்றனர்!

அரசியல் நிர்ணய சபையில் அடிப்படைத் தீர்மானங்களுக்கு நம் தமிழரசுத் தலைவர்கள் கொண்டு வந்த தீர்மானங்களும், திருத்தங்களும், எடுத்துரைத்த ஆணித்தரமான, உள்ளத்தைத் தொடும் தர்க்கரீதியான வாதங்களும் உனக்குத் தெரியும்! எத்துணை பதுமையாக — எத்தனை நயமாக — தமிழினத்தின் கோரிக்கைகளை எடுத்துரைத்தனர்! நமது தலைவர்களின் தர்க்கரீதியான வாதங்களுக்குபதிலளிக்கவக்கற்றஆட்சியாளர் தமதுபெரும்பான்மைபலம் ஒன்றையே அரசியல் நிர்ணய சபையிலும் பிரயோகித்து நமது திருத்தங்களை நிராகரித்தனர் — இல்லை நண்பா, நமது திருத்தங்களை ஊதித்தள்ளியதன் மூலம் இலங்கையின் ஒருமைப்பாட்டையே தாம் உடைத்து தள்ளிவிட்டதை எதிர்காலத்தில் அவர்கள் உணரத்தான் போகிறார்கள்!

தமது கட்சி, அரசியல் நிர்ணய சபையில் அடிப்படைத் தீர்மானங்களுக்கு கொண்டு வந்த திருத்தங்களை — விடுத்த கோரிக்கைகளை புதிய அரசியல் அமைப்புப்பற்றி ஆராய்ந்திடும்

## அரசியல் மடல்

சிறப்பு மாநாடு யாழ் நகரில் கூடும் இச் சமயத்தில் உன் நினைவுக்கு கொண்டுவந்திடுவது பொருத்தமானதாகும்!

(1) இலங்கைக் குடியரசு ஒரு சமஷ்டி அரசமைப்பாக இருக்கவேண்டும். (நகல் சமஷ்டி அரசியல் திட்டத்தையும் சமர்ப்பித்திருந்தோம்)

(2) இலங்கைக் குடியரசு மதச்சார்பற்ற அரசொன்றாதல் வேண்டும். பௌத்த மதம், இந்துமதம், கிறித்துவமதம் இஸ்லாம் மதம் ஆகியவற்றை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்!

(3) மக்களின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் விளக்கும் தீர்மானங்களில் 'பிரஜை' என்று குறிப்பிடப்படும் இடங்களில் எல்லாம் அச்சொல் அகற்றப்பட்டு 'ஆள்' எனும் சொல் புகுத்தப்பட வேண்டும்!

(4) ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறும் உரிமை உடையதாயிருத்தல் வேண்டும் என்பதோடு, அதனது தாய்மொழி மூலம் கல்வி பெறும் உரிமை உடையதாயிருத்தல் வேண்டும். கட்டணம் எதுவுமில்லாமல், அத்தகைய கல்விக்கு திறமையின் அடிப்படையில் சமசந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டியது அரசின் கடமையாதல் வேண்டும்; தாய் மொழி மூலமான பரீட்சைகளின் அடிப்படையில் அரசின் அல்லது அரசினால் ஆதரவளிக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் அல்லது நிறுவனத்தின் சேவைக்குச் சேர்க்கப்பட ஆள் ஒவ்வொருவரும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(5) இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் சிங்களவரோ தமிழரோ தங்கள் தாய்மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமையுடையவராயிருத்தல் வேண்டும்!

(6) ஆள் எவரும் சாதிசம்பந்தமான தகுதியீனங்களுக்கு உட்படுத்தப்படலாகாது. எல்லாச் சாதிப் பாகுபாடுகளும் ஒழிக்கப்படல் வேண்டும். சாதிகாரணமாக தகுதியீனங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு சலுகைகள் அளிக்கப்படலாம்! இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதிபற்றியும், சமயம் பற்றியும் இந்திய அரசியலமைப்புத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்பட வேண்டும்!

(7) அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ நிர்வாக ஒழுங்குகளைப்பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை யெடுக்கும் உரிமை அரசியல் சட்டத்தில் இடம் பெறவேண்டும்!

(8) அ. இலங்கையில் பிறந்த ஆட்கள் எல்லோரும், அவரின் தந்தை இலங்கையில் பிறந்திருந்தால்; அல்லது சட்டமுறையானதல்லாத பிள்ளையாக இருக்குமிடத்து அதன் தாய் இலங்கையில் பிறந்திருந்தால்;

ஆ. இலங்கைப் பெற்றோருக்கு இலங்கைக்கு வெளியே பிறந்துள்ள ஆட்கள் எல்லோரும்;

இ. 1948 நவம்பர் 15முதல் தொடர்ந்து [illegible] இலங்கைப் பிரஜையாக இருந்திருந்தால், இலங்கைப் பிரஜைகளாகக் கருதப்படல் வேண்டும்.

(9) வம்சாவழி மூலமான அல்லது பதிவின் மூலமான எல்லாப் பிரஜைகளினதும் அந்தஸ்து எல்லா நோக்கங்களுக்கும் சமமானதாயிருத்தல் வேண்டும்;

(10) எந்தப் பிரஜையினதும் பிரஜாவுரிமை பறிக்கப்படலாகாது;

(11) சிங்களமும், தமிழும்,

அ. சட்டங்கள் ஆக்கப்பட வேண்டிய மொழிகளாதல் வேண்டும்.

ஆ. இலங்கையின் அரசகரும மொழிகளாதல் வேண்டும்;

இ: நீதிமன்றங்களின் மொழிகளாதல் வேண்டும்;

(ஈ) எல்லாச் சட்டங்களும் பிரசுரிக்கப்படவேண்டிய மொழிகளாதல் வேண்டும்—

—இவைதாம் நண்பா, அரசியல் நிர்ணய சபையில் தமிழினத்தின் சார்பாக நாம் சமர்ப்பித்திருந்த கோரிக்கைகள் — கொண்டு வந்த திருத்தங்கள்! இத்திருத்தங்களில் பெரும்பாலானவை அனைத்துத் தமிழ்க்கட்சிகளின் ஏகோபித்தகோரிக்கைகள்; வல்வையில் நடைபெற்ற அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் மாநாட்டில் தமிழினத்தின் குறைந்தபட்ச கோரிக்கையாக பிரகடனப்படுத்தப்பட்டவையென்பது உனக்குத் தெரியும்—

மேற்கண்ட தமிழினத்தின் ஒன்று பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் அரசியல் நிர்ணய சபைநிராகரித்ததுமட்டுமல்ல—இக்கோரிக்கைகளைவிட்டு பாதிவழி இறங்கி வந்து நமது பிரதிநிதிகளுடன் சமரசத்தீர்வு காணவும் திமிர் பிடித்த ஆட்சி பீடம் பிடிவாதமாக மறுத்துவிட்டது!

இந் நிலையில்தான் 1971ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் நாள் — தமிழ்மொழியுரிமைக் கோரிக்கையும் மறுக்கப்பட்ட நேரத்தில் தமிழினத்தின் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் — தமிழரசுக்கட்சியினர் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி—சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்து தமிழினத்தின் தன்மானம் காத்திடும் பணியில் ஈடுபட்டு நிற்கின்றனர்.

வரவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தின்படி, சிங்கள இனத்தை ஆளும் இனமாகவும், தமிழினத்தை ஆளப்படும் இனமாகவும் வைத்திருக்கும் ஒற்றையாட்சியே தொடர்ந்திருக்கப் போகிறது. தமிழினம் அடிமைகளாக அழிவின் விளிம்புக்கு தள்ளப்படப்போகிறது! ஒற்றையாட்சி அரசியலமைப்பு இன்னும் தொடர்ந்து ஒரு இருபது ஆண்டுகளுக்கு நீடிக்குமானால் தமிழினம் இந்நாட்டில் அழிந்துபோவதை கடவுளாலும் தடுக்க முடியாமற்போய்விடும்!

சிங்களம் மட்டுமே தமிழனுக்கும் ஆட்சிமொழியாகி, நீதிமன்ற மொழியாகி, நமது தொண்டைக்குள் திணிக்கப்படப்போகிறது! சட்டங்கள் சிங்களத்தில்! அரசு அறிக்கைகள் அனைத்தும் சிங்களத்தில்! மொழிபெயர்ப்பு தமிழில் தந்திடினும் அது ஒருபோதும் மூலமாகமாட்டாதே! சொந்த நாட்டில் மொழிபெயர்ப்பு பெற்றிடுவதால் அவமானம் தமிழனுக்கே!

பௌத்தம் அரசாங்க மதமாகும் — பௌத்தர்களுக்கே தனிச் சலுகை!

குடியுரிமை பறிக்கப்பட்டிருக்கும் மலையகத் தமிழ் மகனுக்கு அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாப்பும் கிடையாது — அவன் இந்நாட்டுப் பிரஜையல்லன் என்பதனால்! பதிவுப் பிரஜைகளின் குடியுரிமையும் பறித்திடப்படும் ஆபத்து நிரம்ப உண்டு!

இந் நிலையில், எம்மினத்தின் வரலாற்றில் இதுபோன்ற ஆபத்து இதற்குமுன் என்றுமே வந்ததில்லை எனலாம்! என்ன செய்யப்போகிறோம் நாம்? வரவிருக்கும் ஆபத்தை தடுத்திடுதற்கு வழியென்ன! வகையென்ன?

நம் இயக்கத்தார் பன்னிருவர் அரசியல் அமைப்பை எதிர்த்து, அதைப் பகிஷ்கரித்திடினும், உள்ளே சில தமிழர், எலும்புத்துண்டுக்காய் தமிழ் இனத்துக்கு சவக்குழிதோண்டிட உதவிசெய்கின்றார்! ஒத்தாசை புரிகின்றார்!

அரசியல் சட்டத்தை ஆதரித்து கைதூக்கி, தமிழினத்தின் வரலாற்றில் கறை பூசிவிடாதபடி அன்னவரைத் தடுத்திடுதல் இன்று நம்முன் உள்ள பணி! சிங்கத் தமிழ் இளைஞர்களே சிந்தியுங்கள்! நீவிர் இத்துறையில் நினைத்துவிட்டால் முடியாததொன்றுண்டோ?

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நிர்ணய சபையில் நாம் விடுத்த கோரிக்கைகள்!

அடிமைத்தனம் ஏற்று அழிந்தொழிந்து போவதிலும் — விடுதலைக்குப் போராடி வீர வரலாறு திட்டிடுதல் அன்றோ நம் மரபு! நம் பண்பு! விடுதலைக்குப் போரிடாது கோழைகளாய், மோழைகளாய் அஞ்சிக் கெஞ்சி அடிமைத்தனத்தை நாம் ஏற்பின், பழியன்றோ நமக்கு எஞ்சும் எதிர்காலத்தில் — பழிப்பர் நம் வருங்கால சந்ததியார் — வடிப்பர் கண்ணீர்! சோற்றுலடித்த பிண்டங்களா நம் முன்னோர் என்று!

நமக்கென்றோர் பெருமைமிகு வரலாறுண்டு இந்நாட்டில் — நாற்றிசையும் புகழ்கின்ற நாவினிக்கும் நறும் தமிழை நம் மொழியாய்க் கொண்டோம்; கடல் வளமும், காட்டு வளமும், நில வளமும், பனைவளமும், மீன் வளமும் தேன் வளமும் முத்து வளமும், இயற்கை வளமத்தனையும் மெத்தவுண்டு நம்ஈழத்தமிழ் நாட்டில்; இயற்கை எழில் கொழிக்கின்ற துறைமுகங்கள் அத்தனையும் இங்கேயுண்டு! பாடுகின்ற மீனினமும், நெற்கதிர்கள் படுக்கின்ற வயல் பரப்பும், ஓடுகின்ற ஆறுகளும் ஓடைகளும் மெத்தவுண்டு நம்நாட்டில்; மூல வளம் அறிவு வளம் ஆற்றல் வளம், அத்தனை வளமுமுண்டு எங்களிடம்; இத்தனை வளங்களுக்கும், வளமான தமிழ் மொழிக்கும் சொந்தக்காரராகிய நாம் வேண்டாத மொழிக்கு அடிமையாகி அழிந்தொழிந்திட ஒப்புவோமோ?

நம் உரிமையை அங்கீகரிக்க மறுத்திட்ட தனிச் சிங்கள பௌத்த அரசியலமைப்பை நிராகரித்திடவும், தங்கத் தமிழ் நிலத்தில் தமிழ் தன்னாட்சியை நிறுவும் போராட்டத்துக்கு வலுவூட்டவுமே நமது இயக்கத்தின் சிறப்பு மாநாடு கூடுகிறது யாழ்நகரில்!

வங்க இனத்தை கொன்றொழித்துப் புதைத்துவிட வெறிகொண்டெழுந்த யாஹியாகானின் ஆணவத்தை அடக்கி, வங்க மக்களுக்கு சுயாட்சியையும் நீதியையும் பெற்றுக் கொடுத்தது அறம் என்றால் — அதே அறம் ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போருக்கும் கைகொடுக்கும்; உதவி புரியும் என்ற நம்பிக்கையுடன் செயலில் இறங்குவோம்! நமது ஈழத் தமிழ் நாட்டில், நமது அரசை உருவாக்குவதொன்றே நமது பேச்சும் மூச்சும் செயலுமாகட்டும் — நாம் வாழவேண்டுமெனில், நமது நாட்டை நாமே ஆளவேண்டும்!

நமது ஈழத்தமிழ் நாட்டில் நமது அரசை நிறுவாவிட்டால், தமிழினம் சுயமரியாதையுடன் வாழமுடியாதது மட்டுமல்ல — அழிவிலிருந்தும் தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்வதும் முடியாத காரியமாகிவிடும்! இனக்கொலையிலிருந்து தமிழினம் தப்பிப் பிழைத்திட தமிழர் நாட்டில் தமிழரசை நிறுவுவதைவிட வேறு வழியே இல்லை!

''வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதோ
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழிதமிழா''

என்று புரட்சிக்கவிஞரின் எழுச்சிப் பண்ணிசைத்தபடி தந்தைசெல்வா காட்டும் விடுதலைப் பாதையில் — கல்லும், முள்ளும் குத்தினாலும், கரடுமுரடான பாதையாக இருந்தாலும் கண்ணீரும் வியர்வையும் இரத்தமும் சிந்தினாலும் வீர நடைபோடத் தயாராவோம்!

உன் அன்புத்தோழன்.

கோவை-மகேசன்

## இனவிடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

29-1-72 பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள 'கனக பவனத்தில்' விஷயாலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்களை விட்டு விஷயாலோசனைக் கூட்டம் முடிவெடுக்கும்;

30-1-72 காலை 9 மணிக்கு யாழ். மாநகரசபை மண்டபத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். தமிழ் தேசியகீதத்தை தொடர்ந்து யாழ். மாநகரசபை உறுப்பினரும் வரவேற்புக்குழுத் தலைவருமான திரு. நா. த. செல்லத்துரை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார்!

இதனைத் தொடர்ந்து அரசியல் மாநாடு நடைபெறும்; தலைவர் திரு. கி. மு. இராசமாணிக்கம் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்துவார். மாநாட்டுத் தீர்மானங்கள் இங்கு பிரகடனப்படுத்தப்படும்!

மாலை 6.00 மணிக்கு கவியரங்கு நடைபெறும். 'எம்மால் ஏன் முடியாது' எனும் தலைப்பில் முன்னணிக் கவிஞர்கள் பலர் கவிதை பாடுவர். இதனைத் தொடர்ந்து மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக பொதுக்கூட்டம் நடைபெறும். கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும், பா. உ. க்களும், உரைநிகழ்த்துவர்.

## அரசியல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களதுமொழியுரிமையை இழங்கை முழுவதும் பிரயோகிக்கக்கூடிய முறையில் திருத்தியமைக்கப்படவேண்டும்.

''பிரஜாவுரிமைச் சட்டங்களைப்பற்றிக் கூறும் அரசியல் நகல் சட்டத்தின் 67வது பிரிவு வம்சாவளிப் பிரஜைகளுக்கும் பதிவுப்பிரஜைகளுக்கும் பாரபட்சம் காட்டுவதாக அமைந்துள்ளது. இதுவும் திருத்தியமைக்கப்படவேண்டும்.

''அடிப்படை உரிமைகள் சம்பந்தமான தீர்மானத்தில், அடிப்படை உரிமைகள் 'பிரஜைகளுக்கு' மட்டும் என்று இல்லாமல் சட்டபூர்வமாக இலங்கையில் வாழும் அனைவருக்கும் இருக்கும் என்று மாற்றியமைக்கப்படவேண்டும்.''

—இவ்வாறு கம்யூனிஸ்ட் தொழிற் சங்கம் கூறுகிறது. அரசாங்கத்தில் ஓர் அங்கமான கம்யூனிஸ்ட் கட்சிக்கு அரசாங்கத்தைக்கொண்டு இவற்றை ஏற்றுக்கொள்ளும்படி செய்யும் திராணி உண்டா?

ஞான வீர சங்க
வாசிகசாலையும்,
நாகநாதன்
நினைவு மண்டபமும்
திறப்புவிழா

மேற்படி விழா உயர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களினால் 31-1-1972ல் ஆரம்பித்துவைக்கப்படும்; இவ் விழாவில் வட கிழ் மாகாணங்களின் தமிழரசு நா. மன்ற உறுப்பினர்கள் கலந்து கருத்துரை வழங்குவார்கள்;

இவ்வாசிகசாலையும்மண்டபமும் 5000 ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இது கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அழகுடன் திகழ்கின்றது.

## திரைப்படக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படங்களை தமிழ்மக்களிடமும் திணித்து தமிழ் கலாசாரத்தை வேரறுப்பது தான் என்றும் நாம் கூறிவந்திருக்கிறோம்.

நமது கூற்று இப்போது உண்மையாகிவிட்டது. உள்ளூரில் தமிழ்த் திரைப்படத் துறையை வளர்ப்பதும் அரசின் நோக்கமாக இருந்தால் திரைப்பட கூட்டுத்தாபன இயக்குனர் சபையில் தமிழருக்கும் இடமளித்திருக்க வேண்டும்? ஆனால் இயக்குனர் சபையிலோ ஒரு தமிழர் தானும் இடம்பெறவில்லை.

உள்ளூர் தமிழ்த் திரைப்படத்துறை வளர்ச்சிக்கு அரசு ஏதோ அள்ளித்தரப் போவதாக நம்பி தமிழகத் திரைப்பட இறக்குமதியை நிறுத்தவேண்டுமென இங்கு இனவெறியருடன் சேர்ந்து பல்லவி பாடிய ஒரு சில தமிழர்களும் இனிமேல் தான் ஓடி முழிக்கப்போகிறார்கள்;

இனி நடக்கப்போவது இது தான்! தமிழகத்திலிருந்து தமிழ்த் திரைப்பட இறக்குமதி தடைசெய்யப்படும். தமிழர்களின் பொழுதுபோக்கு உரிமை மறுக்கப்படுவதுடன் தமிழகத்துடனான கலைகலாசார தொடர்பும் இதன்மூலம் துண்டிக்கப்படும் — சிங்கள கலாசாரத்தை பிரதிபலிக்கும் சிங்களப்படங்களே தமிழில் 'டப்' செய்யப்பட்டு தமிழர் மத்தியில் திரையிடப்படும்; இந்த வேலையைத்தான் திரைப்படக் கூட்டுத்தாபனம் இங்கு செய்யப்போகிறது.

தமிழ் கலாசாரத்தை வளர்க்கவேண்டிய மற்றோர் ஸ்தாபனமான ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இயக்குனர் சபையிலும் தமிழர் [illegible] நியமிக்கப்படவில்லை [illegible] பது தெரிந்ததே;

## மன்னாரில் எண்ணெய்வளம்

ஈழத் தமிழ்நாட்டின் பிரசித்திபெற்ற நகரங்களில் ஒன்றான மன்னாரிலும் வடபகுதியிலும் எண்ணெய்வள ஆராய்ச்சித்திட்டத்தின் படி பரீட்சார்த்தமாக எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படவிருக்கின்றன.

அண்ணாவின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பிரிந்து சென்று இயக்கத்தை உடைப்பதற்கு திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்த நேரம் அது; அவர்கள் நடத்திய குளறுபடிப் பிரசாரத்தால் இயக்கத்தவர் மத்தியிலே மனக் குழப்பங்களும் ஐயங்களும் ஏற்பட்டிருந்த வேளையது. அந்நேரத்தில் சுதந்திரன்மூலம், தீவிரமாக பணியாற்றவேண்டிய கடமை எனக்கிருந்ததால், தமிழ் மாநாட்டுக்கு செல்லவோ அண்ணனின் ஆட்சியைக் கண்டுகளிக்கவோ என்னால் முடியாமற் போய் விட்டது! வைதீக பாஷையில் சொல்வதானால் 'பிராப்தம்' இல்லாமற் போய்விட்டது!

ஆனாலும் என்ன! அண்ணன்வழியில் தமிழ்நாட்டை ஆளும் தம்பியின் ஆட்சியைக் காணத்தான் இதோ போய்க் கொண்டிருக்கிறேனே...!

என் சிந்தனை கலைகிறது!

ஆகா, விமானம் திருச்சியில் இறங்குகிறது — தமிழகத்து மண் வாசனை உள்ளத்தில் சிலுசிலுப்பைத் தருகிறது. அகத்தியனும் தொல்காப்பியனும் வள்ளுவனும் இளங்கோவும், கம்பனும், பாரதியும் பாரதிதாசனும் உலவிய மண்ணில் அல்லவா நாம் காலடி வைக்கப்போகிறோம்! இராசராசனும் இராசேந்திரனும், கரிகாலனும், தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும், சேரன் செங்குட்டுவனும் கட்டபொம்மனும், அறிஞர் அண்ணாவும் ஆண்ட பூமியில் அல்லவா நாம் மிதித்து நடக்கப்போகிறோம்! சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும், மணிவாசகரும், ஆழ்வார்களும், அருணகிரிநாதரும், பட்டினத்தாரும், இராமலிங்க வள்ளலும் பாடிய திருத்தலங்களையல்லவா நாம் பார்த்து பரவசமடையப் போகிறோம்? இவற்றையெல்லாம் நினைக்க நினைக்க இதயம் புல்லரித்து புளகாங்கிதமடைகிறது.

திருச்சியில் விமானத்திலிருந்து இறங்கி வருகிறோம். ஒருவர் பரபரப்புடன் ஓடி [illegible] 'அதை' பறித்துக்கொண்டு ஓடுகிறார்! —வளரும்.

## தமிழரசுத் தொண்டர் வீமக்குட்டி மறைவு

மட்டுநகரைச்சேர்ந்த பழம் பெரும் தமிழரசுத் தொண்டர் திரு. அ. வ. இ. வீமக்குட்டி அவர்கள் 22. 1. 72ல் காலமான செய்தியறிந்து கவலையடைந்தோம்;

சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இவர் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால முதல் அதன் விசுவாசமுள்ள தூய தொண்டராக பணியாற்றியவர். பிரமச்சாரியாகவே வாழ்ந்து வந்தவர்—

அவரது கடைசி விருப்பப்படி, அவரது சடலத்துக்கு தமிழரசு மூவண்ணச் சால்வையும் தமிழரசு மூவண்ணத்தில் தொடுக்கப்பட்ட மாலையும் சூட்டப்பட்டு மூவண்ண ஆடையால் சடலம் மூடப்பட்டிருந்தது;

இறுதி ஊர்வலத்தில் திரு. இராசதுரை பா. உ. திரு. வ. பாலசிங்கம் உட்பட ஏராளமான கட்சியனுதாபிகள் கண்ணீர் மல்க கலந்து கொண்டனர்.

தூயதொண்டர் வீமக்குட்டியின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை காணிக்கையாக்குகிறோம்!

—ஆசிரியர்

## அண்ணா நினைவு அஞ்சலிக் கூட்டங்கள்

பேரறிஞர் அண்ணா நினைவு அஞ்சலிக் கூட்டங்கள் பெப்ரவரி 3ம் நாள் தொடக்கம் ஈழத்தமிழகமெங்கும் நடைபெறவுள்ளன.

அண்ணா அமரரான பெப்ரவரி 3ம் திகதி பி. ப. 6.00 மணிக்கு யாழ் மாநகர சபை மண்டபத்தில் அண்ணா நினைவு அஞ்சலிக் கூட்டமொன்றை யாழ் திருக்குறள் முன்னணிக் கழகம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

## கொழும்பு

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரிரு தோழர்கள் வருணித்தார்கள். மாடு தாக்க வருகிற போது 'மாடு' மாடு! என்று கத்துவதுதான் இயற்கையானதே தவிர 'பன்றி' பன்றி' என்று யாரும் கூச்சலிடமாட்டார்கள். அப்படிக் கூச்சலிடுகிறவர்கள் ஒன்று குருடர்களாய் இருப்பார்கள். அல்லது பைத்தியகாரர்களாய் இருப்பார்கள்;

இங்கேயும் அப்படித்தான். சிங்கள இன வெறியர் மலையகத் தொழிலாளராகிய உங்களைத் தாக்கி வருத்துகின்ற நேரத்தில் 'சிங்கள வெறியர் சிங்கள வெறியர்!' என்று கத்துவதை விட்டு 'முதலாளிகள்' முதலாளிகள்!' என்று உங்களில் சிலர் கூச்சலிடுகிறார்கள். நாங்கள் மட்டும்தான் சரியாகச் சத்தம் போடுகிறோம்!

நண்பர்களே! நாங்கள் சமுதாய சமத்துவப் போராட்டத்தில் எப்போதும் தொழிலாளிகள் பக்கமே! நாங்கள் முதலாளிகளுக்கு முண்டு கொடுப்பவர்களல்ல! ஆனால் ஈழத்தில் அரசாங்கத்தாலும் இந்நாட்டின் பேரவிச் சோசலிச பெரும்பான்மை இனப் புரட்டுத் தலைவர்களாலும் மலையக மக்கள் 'தமிழர்கள்' என்பதாலேயே ஒதுக்கப்பட்டும்— வதைக்கப்பட்டும் வருகிறார்கள் என்பதால் நாங்கள் இனவிடுதலைப் போரிலேயே முதல் கவனம் செலுத்தவேண்டிய நிலையில் இருக்கிறோம்!

ஈழத் தமிழனுக்கு என்று பூரண சுதந்திரம் கிடைக்கிறதோ—அன்றுதான் மலையகத் தொழிலாளிக்கும் வாழ்வு கிடைக்கும் என்பதைக் கூறிக்கொண்டு வாழ்க மலையகத் தமிழினம் என உங்களை வாழ்த்துகிறேன்— வணக்கம்!

5. 2. 72ல் உருத்திரபுரத்தில் உருத்திரபுரம் தமிழரசுக்கிளை திரு. கணேசபிள்ளை தலைமையில் அண்ணா அஞ்சலிக் கூட்டம் நடத்தவுள்ளது.


யோகக்கலை

'யோக பலத்தினும் சிறந்த பலமில்லை
ஞான ஒளியினும் சிறந்த நண்பனில்லை
மாயையினும் கொடிய தளை இல்லை
ஆணவத்தினும் கொடிய பகை இல்லை.'

—கிரந்த ஸம்ஹிதை.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 15 அனுப்பி விளக்கப்படங்களுடன் கூடிய யோகக்கலை என்னும் சிறந்த நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கின்றது



3வது வெற்றி வாரம்

கெப்பிட்டல்
(கொழும்பு)
பிளாசா
(வெள்ளவத்தை)
வெலிங்டன் — லிடோ
(யாழ் நகர்) (யாழ் நகர்)



சிவாஜி, பத்மினி, ஸ்ரீகாந்த்,
தங்கவேலு நாகேஷ், ராகவன்,
— நடித்த — சிவாஜி பிலிம்ஸ்

# வியட் நாம் வீடு

3வது வெற்றி வாரம்
கிங்ஸ்லி
(கொழும்பு)



ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
அசோகன் — சாவித்திரி
நாகேஷ்
நடித்த

# ம ன சா ட் சி

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



6வது வெற்றி வாரம்

சென்ட்ரல் ராணி
(மருதானை) (யாழ்நகர்)

நடிகர்திலகத்தின் [illegible]வது வெற்றிச் சித்திரம்
சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்) 
# ச வா லே ச மா ளி

சிலோன் தியேட்டடஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

4வது வாரமாக காட்சி தருகின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ்,
மற்றும் பலர் நடித்த

# சு ம தி என் சு ந் த ரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது — ஆசிரியர் கோவை மகேசன்